
பக்கம் 05
கைதிச் சாரணருக்கு சின்னம் சூட்டப்பட்டது


பக்கம் 06
அதிர்ந்தது இடிந்தகரை


பக்கம் 07
பஹாமஸில் கவிழ்ந்தது படகு


பக்கம் 23
இலங்கை வருகிறது இங்கிலாந்து லயன்ஸ்



உதயன்

பக்கம்: 24
வன்னி : ரூபா.20
யாழ். : ரூபா.20
கொழும்பு : ரூபா.30

சுடர்: 29 கதிர்: 002 வள்ளுவர் ஆண்டு: 2044 | கார்த்திகை 12, வியாழன் 28.11.2013



மழைக்கான சாத்தியம் உண்டு

# தமிழகத்தில் நேற்று உணர்வுபூர்வ நிகழ்வு

## புலம்பெயர் தேசங்களிலும் தமிழர்கள் திரண்டு அஞ்சலி

கொழும்பு, நவம்பர் 28
விடுதலைப் போராட்டத்தில் தமது உயிர்களை ஆகுதியாக்கிக்கொண்ட மாவீரர்களுக்கு அஞ்சலி செலுத்திச் சுடர் ஏற்றும் நிகழ்வு நேற்று மாலை தமிழகத்தில் உணர்வெழுச்சியுடன் நடைபெற்றது.
தமிழகத்தில் நடைபெற்ற இந்த உணர்வுபூர்வ நிகழ்வில் என்றும் இல்லாதவாறு பெரும் எண்ணிக்கையானோர் கலந்துகொண்டு சுடரேற்றி மலர் தூவி வணக்கம் செலுத்தினர்.
தமிழகத்தில் மாவீரர்களை நினைவு கூரும் பிரதான நிகழ்வு தஞ்சை விளார் பகுதியில் அண்மையில் திறந்து வைக்கப்பட்ட முள்ளிவாய்க்கால் நினைவு முற்றத்தில் உலகத் தமிழர் பேரவையின் தலைவர் பழ. நெடுமாறன் தலைமையில் நடைபெற்றது.
நேற்று மாலை 6.05 மணிக்கு பிரதான சுடரேற்றலுடன் இந்த நிகழ்வு ஆரம்பமானது. இதில் தமிழின உணர்வாளர்கள், தமிழகக் கட்சிகளின் பிரதிநிதிகள், தமிழ்த் திரை உலகத்தினர், மாணவர்கள் எனப் பெரும் எண்ணிக்கையானோர் கலந்துகொண்டனர்.
கடந்த வருடங்களை விட இம்முறை தமிழகத்தில் மாவீரர் தின நிகழ்வுகள் உணர்வுபூர்வமாக நடைபெற்றன. பல இடங்களில் சுடரேற்றப்பட்டு அஞ்சலி செலுத்தப்பட்டது. இந்த

21 ஆம் பக்கம் பார்க்க






## பல்கலை பரமேஸ்வரன் ஆலயத்திலும் வழிபாடு

யாழ்ப்பாணம், நவ.28
யாழ். பல்கலைக்கழக விரிவுரையாளர்கள் விடுதலைப் போராட்டத்துக்காக உயிர்த்தியாகம் செய்தவர்களை நினைவு கூர்ந்து நேற்றுப் பிரார்த்தனையில் ஈடுபட்டனர் எனத் தெரிவிக்கப்பட்டது.
நேற்று நண்பகல் 12 மணிக்கு யாழ். பல்கலைக்கழகத்துக்


21 ஆம் பக்கம் பார்க்க

# தடைகளையும் தாண்டி தாயகத்தில் தீபங்கள்

## நேற்று மாலை சுடர்விட்டு எரிந்தன

யாழ்ப்பாணம், நவ.28
தமிழர் தாயகப் பகுதிகளில் வலிந்து ஏற்படுத்தப்பட்ட நெருக்கடிகள், தடைகள் என்பனவற்றைத் தாண்டி நேற்று மாலை தீபங்கள் சுடர்விட்டு எரிந்தன.
விடுதலைப்போராட்டத்தில் வித்தாகிப் போனவர்களை நினைத்து மக்கள் தீபம் ஏற்றினர்.
தமிழர் தாயகப் பிரதேசமான வடக்கு - கிழக்கில் கடந்த ஒரு வாரகாலமாகப் படையினர், புலனாய்வாளர்கள், பொலிஸார் குவிக்கப்பட்டு ரோந்து நடவடிக்கைகள் தீவிரப்படுத்தப்பட்டிருந்தன.
நினைவு நிகழ்வுகள் இடம்பெறலாம் என்று எதிர்பார்க்கப்பட்ட இடங்களில் படையினர் அதிகளவில் குவிக்கப்பட்டிருந்தனர்.

21 ஆம் பக்கம் பார்க்க



## ஊடக சுதந்திரத்துக்கான உயர் விருது உதயனுக்கு

### நேற்று பிரான்ஸில் வழங்கப்பட்டது

*பரிஸ், நவ.28*
*பிரான்ஸின் தலைநகர் பரிஸைத் தளமாகக் கொண்டு இயங்கும் எல்லை கடந்த ஊடகவியலாளர் அமைப்பு ஆண்டுதோறும் சர்வதேச ரீதியாக வழங்கி வரும் ஊடக சுதந்திரத்துக்கான விருதுகளில் மிக முக்கிய விருது உதயனுக்கு வழங்கப்பட்டுள்ளது.*
*பிரான்ஸின் வடகிழக்குப் பிராந்தியமான ஸ்ரார்ஸ்பேர்க்கில் நேற்று இரவு உலக ஊடகவியலாளர்கள் பெரும் எண்ணிக் கையில் திரண்டிருந்த ஒரு நிகழ்வில் வைத்து இந்த விருது உதயனுக்கு வழங்கப்பட்டது.*

21 ஆம் பக்கம் பார்க்க

## அரசின் திட்டங்களுக்கும் நேற்று படையினர் தடை

யாழ்ப்பாணம், நவ.28
அரசின் வேலைத் திட்டங்களையும் நேற்றுப் படையினரும், பொலிஸாரும் தடுத்து நிறுத்தினர்
வாழ்வின் எழுச்சித் திட்டத்தின் ஊடாக மேற்கொள்ளப்பட்ட மரக்கன்று விநியோகம் படையினரால் தடுத்து நிறுத்தப்பட்டது.
இலங்கைஅரசினால் நடைாவிய

21 ஆம் பக்கம் பார்க்க

# நாடாளுமன்றிலும் நேற்று அஞ்சலி

கொழும்பு, நவ.28
"தமிழ் மக்களின் உரிமைகளை வென்றெடுக்கும் போராட்டத்தில் தமது உயிரைத் தியாகம் செய்த அனைத்து வீரப் பெருந்தகைகளுக்கும் கண்ணீர் அஞ்சலி செலுத்துகிறேன்."
இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சீனித்தம்பி யோகேஸ்வரன் நேற்றுச் சபையில் தெரிவித்தார்.
நாடாளுமன்றில் நேற்று வரவு - செலவுத் திட்டத்தின் இரண்டாம் வாசிப்பு மீதான ஐந்தாம் நாள் விவாதம் நடைபெற்றது. இதில் உரையாற்ற ஆரம்பித்த நாடாளுமன்ற உறுப்பினர் யோகேஸ்வரன் ,

21 ஆம் பக்கம் பார்க்க

## மீண்டும் கைதுகள்

யாழ்ப்பாணம், நவ.28
கடந்த வருடம் இடம்பெற்றதைப் போன்று பயங்கரவாதத் தடுப்புப் பிரிவினரின் (ரி.ஐ.டி) கைது நடவடிக்கைகள் வடக்

21 ஆம் பக்கம் பார்க்க

## நெடுந்தீவு தவிசாளர் றெக்ஷியன் தலையில் சுடப்பட்டே படுகொலை

நெடுந்தீவு, நவ.28
நெடுந்தீவு பிரதேச சபையின் தவிசாளர் டானியல் றெக்ஷியன் (வயது -47) துப்பாக்கியால் சுடப்பட்டே கொலை செய்யப்பட்டுள்ளார் என்று உடற் கூற்றுப் பரிசோதனையில் தெரிய வந்துள்ளது.
அவர் நஞ்சருந்தி உயிரிழந்திருக்கலாம் என்று முன்னர் தெரிவிக்கப்பட்ட போதும், நேற்று மேற்கொள்ளப்பட்ட உடற்கூற்றுப் பரிசோதனையின் போது றெக்ஷியனின்

21 ஆம் பக்கம் பார்க்க

## பிரதேச சபை உறுப்பினரின் வீட்டுக்கு குண்டு வீச்சு! சூடு!


### மீசாலை கிழக்கில் அதிகாலை சம்பவம்

யாழ்ப்பாணம், நவ.28
சாவகச்சேரி பிரதேச சபை உறுப்பினரின் வீட்டுக்குப் பெற்றோல் குண்டு வீசித் தாக்கிய இனந்தெரியாதோர் துப்பாக்கிச் சூடும் நடத்தினர்.
மாவீரர் துயிலும் இல்லம் புனரமைக்கப்பட வேண்டும் என்ற பிரேரணையைச் சபையில் முன்மொழிந்த தமிழ்த் தேசி


21 ஆம் பக்கம் பார்க்க

# கெடுபிடிகளையும் தாண்டி ஒளிர்ந்தன தீபங்கள்






யாழ்ப்பாணத்தில் பிரத்தியேகமான இடமொன்றில்....



யாழ்.போதனா வைத்தியசாலையில்...



யாழ்.பல்கலைக்கழகத்தில்



வவுனியாவில்...



முல்லைத்தீவில் வட மாகாண சபை உறுப்பினர்...

## வவுனியா விபத்தில் முதியவர் சாவு

வவுனியா, நவ.28

வவுனியா குருமன்காட்டுச் சந்திப் பகுதியில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற வாகன விபத்தொன்றில் வயோதிபர் ஒருவர் உயிரிழந்தார்.

இந்தச் சம்பவத்தில் திருநாவற்குளத்தைச் சேர்ந்த கந்தையா - கனகலிங்கம் (வயது 62) என்பவரே உயிரிழந்தவராவார்.

இது தொடர்பாக வவுனியா பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (த-402)

## விசேட ஒலிம்பிக் போட்டிக்கு யாழ்.மாணவர்கள் மூவர்



யாழ்ப்பாணம், நவ.28

ஆஸ்திரேலியாவில் நாளை ஆரம்பமாகவுள்ள ஆசிய - பசுபிக் விசேட ஒலிம்பிக் விளையாட்டுப் போட்டிக்கு யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த விசேட தேவையுடைய மூன்று மாணவர்கள் தெரிவாகியுள்ளனர். மூவரும் நேற்று இரவு ஆஸ்திரேலியா பயணமாகினர். கோண்டாவில் சிவபூமி பாடசாலையைச் சேர்ந்த சி.தனுஷன், இ.கிரோன் பிளைக்னோ, சி.துஷ்யந்தன் ஆகியோரே தெரிவு செய்யப்பட்டவர்களாவர்.

நாளை தொடக்கம் மூன்று நாள்கள் நடைபெறும் இந்தப் போட்டியில் இலங்கையிலிருந்து 14 மாணவர்கள் பங்கேற்கின்றனர். அவர்களில் இந்த மூன்று பேரும் தமிழ் மாணவர்கள். இந்த மூவருக்கும் யாழ்.பல்கலைக்கழக மைதானத்தில் சுமார் நான்கு மாதங்களாகப் பயிற்சியளிக்கப்பட்டது. யாழ்.பல்கலைக்கழக உடற்கல்வி விரிவுரையாளர் செல்வி ராதை அருளம்பலம் இவர்களுக்கான பயிற்சிகளை வழங்கியிருந்தார். (த-4)

## புத்தூர் சந்தி விபத்து; நேற்று மற்றொருவர் சாவு

யாழ்ப்பாணம், நவ.28

புத்தூர் சந்தியில் இடம்பெற்ற விபத்தில் படுகாயமடைந்து வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த மற்றொருவர் நேற்று புதன்கிழமை உயிரிழந்தார். அச்சுவேலியைச் சேர்ந்த சண்முகம் தவபாலன் (வயது -64) என்பவரே நேற்று உயிரிழந்தார். இதே விபத்தில் படுகாயமடைந்து வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட கந்தசாமி ரனோஜன் (வயது -19) அன்றைய தினமே உயிரிழந்திருந்தார்.

நேற்றுமுன்தினம் இரண்டு மோட்டார் சைக்கிள்கள் ஒன்றுடன் ஒன்று மோதியதனால் இந்த விபத்து ஏற்பட்டது. காயமடைந்த நால்வரில் இருவர் உயிரிழந்துள்ளனர். மேலும் இருவர் தொடர்ந்தும் யாழ்.போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றனர். (த-4)

# பிரதேச செயலரை தாக்கமுயன்ற பிக்கு

### பட்டிப்பளையில் நேற்றுக் காலை பதற்றம் விகாரையை உடன் பதிய மறுத்ததால் சீற்றம்

மட்டக்களப்பு, நவ.28

பட்டிப்பளை பிரதேச செயலகத்துக்குள் அத்துமீறிப் புகுந்த பிக்கு ஒருவர் பிரதேச செயலரை தாக்க முயன்றதுடன் அங்கிருந்த உடைமைகளுக்கும் சேதம் விளைவித்தார் என்று குற்றஞ் சாட்டப்பட்டுள்ளது.

"அத்துமீறிப் புகுந்த பிக்கு அங்கு பிரதேச செயலரை அச்சுறுத்தி அவரின் அறையின் மேசையிலிருந்த கணினி, தொலைபேசி மற்றும் பக்ஸ் இயந்திரம் ஏனைய ஆவணங்களைத் தூக்கி வீசினார்" என்று சாட்சி ஒருவர் தெரிவித்தார். நேற்றுப் புதன்கிழமை காலை இந்தச் சம்பவம் இடம் பெற்றுள்ளது.

பட்டிப்பளை பிரதேச செயலர் பிரிவு மட்டக்களப்பு படுவான் கரையில் அமைந்துள்ளது.

மட்டக்களப்பு மங்களகம விகாராதிபதி அம்பிட்டிய சுமணரெத்தின தேரரே வெள்ளை வானில் வந்து பிரதேச செயலர் திருமதி வில்வரெத்தினத்தை அச்சுறுத்தியதுடன் அடாவடித்தனங்களிலும் ஈடுபட்டார் எனச் சாட்சிகள் கூறுகின்றன.

கச்சக்கொடி சுவாமி மலை கிராமத்தில் அமைக்கப்பட்டு வரும் விகாரையை பதிவு செய்வதற்கு பிரதேச செயலரிடம் விகாராதிபதி சுமணரெத்தின தேரர் கோரியுள்ளார்.

விகாரை அமைக்கப்பட்டுள்ள காணியின் உறுதிப்பத்திரம் உட்பட ஏனைய ஆவணங்களை எடுத்து வரும்படி பிரதேச செயலர் அவருக்கு ஆலோசனை வழங்கியுள்ளார்.

"இதைக் கேட்ட பிக்கு, நான் எந்த ஆவணமும் சமர்ப்பிக்க மாட்டன் எனச் சீறிவிட்டு பிரதேச செயலரை கைகளால் தாக்குவதற்கு முயன்றார். அப்போது அருகிலிருந்து பிரதேச செயலக ஊழியர்கள் இருவர் பிக்குவைத் தடுத்தனர். பின்பு பிரதேச செயலரின் அலுவலக மேசையிலிருந்த ஆவணங்களையும் ஏனைய உபகரணங்களையும் எடுத்து எறிந்து விட்டு வெளியேறினார் பிக்கு" என பிரதேச செயலக ஊழியர்கள் கூறினர்.

சம்பவம் குறித்து பிரதேச செயலக நிர்வாகம் கொக்கட்டிச்சோலை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளது என பிரதேச செயலர் கூறினார். எனினும் அவ்வாறான ஒரு முறைப்பாடே கிடைக்கவில்லை என்று கொக்கட்டிச்சோலை பொலிஸார் உதயனிடம் தெரிவித்தனர். இருந்தபோதும் பொலிஸார் நேரில் சம்பவ இடத்துக்கு வந்து விசாரணை நடத்தியதுடன் வாக்கு மூலங்களையும் பதிவு செய்து சென்றனர் என்று பிரதேச செயலர் உறுதிப்படுத்தினார்.

பிக்குவின் "அடாவடித்தனத்தை" கண்டித்து பிரதேச செயலக ஊழியர்கள் நேற்றுப் புதன் கிழமை உடனடியாக ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

அண்மைக் காலமாக மட்டக்களப்பு மாவட்டத்தில் எங்கும் மங்களகம விகாராதிபதி அம்பிட்டிய சுமணரெத்தினதேரர் தமிழ் மக்களுக்கு எதிராக பல்வேறு நடவடிக்கைகளிலும் ஈடுபட்டு வருகிறார் என்றும் பரவலாகக் குற்றஞ்சாட்டப்படுகிறது.


சம்பவம் தொடர்பில் சுமணரெத்தின தேரரின் கருத்தை பெறமுடியவில்லை. சம்பவத்தின் பின்னர் அவரது தொலைபேசியுடன் தொடர்புகொள்ள முடியவில்லை. (த)



மாவீரர் தினத்தை முன்னிட்டுத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பிரதிநிதிகள் நேற்று வடக்கு மாகாணக் கல்வி அமைச்சின் பிரத்தியேக அலுவலகத்தில் மரங் களை நாட்டினார்கள்.
இந்த நிகழ்வில் வடக்கு மாகாண முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரன், வடக்கு மாகாண கல்வி அமைச்சர் த.குருகுலராஜா, வடக்கு மாகாண விவசாய அமைச்சர் பொ.ஐங்கரநேசன், வட மாகாண சபை உறுப்பினர்களான பா.கஜதீபன், இ.ஆனல்ட் ஆகியோர் மரங்களை நாட்டினர். (த-14)

# முல்லையில் 55 பேர் டெங்கால் பாதிப்பு

முல்லைத்தீவு, நவ.28
முல்லைத்தீவு மாவட்டத்தில் கடந்த ஜனவரி மாதம் முதல் நவம்பர் மாதம் வரையான காலப் பகுதியில் 55 பேர் டெங்கு நோயாளர்களாக இனங் காணப்பட்டுள்ளனர்.
துணுக்காய்தென்னியன் குளம், மாந்தை கிழக்கு பகுதி களில் 5 பேரும், ஏனைய பகுதிகளில் 50 பேரும் டெங்கு நோயாளர்க ளாக இனங் காணப்பட்டனர்.
இந்த விடயம் தொடர்பாக முல் லைத்தீவுமாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிப் பாளரிடம் தொடர்பு கொண்டு கேட்டபோது முல்லைத்தீவு மாவட்டத்தில் 55 டெங்கு நோயாளர்கள் இனங்காணப் பட்டு இவர்களுக்கு உரிய சிகிச்சைகள் வழங்கப்பட்டுள்ள தாகவும் தெரிவிக்கப்பட்டது.
வேறு மாவட்டங்களில் இருந் தும் தென் பகுதியில் இருந்தும் வருபவர்களே டெங்கு நோயி னால் பாதிப்புக்கு உள்ளாகியதாக அடையாளம் காணப் பட்டுள் ளனர். உரிய சிகிச்சைகள் மூலம் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்துள்ளதாகவும் அடுத்த வாரம் முதல் டெங்கு விழிப்புணர்வு செயற் பாடுகள் முன்னெடுக்கப் படவுள்ளன என்றும் பணிப்பாளர் மேலும் தெரிவித்தார். (எ-6)



கிளிநொச்சி மாவட்டத்தில் இரண்டாவது பெரிய குளமாகவும் வருடத்தில் 5 தடவை களுக்கு மேல் வான் பாய்வதுமான அக்கராயன் குளம் தற் போது வறண்ட நிலையில் காணப்படுகிறது. (எ-18)

## ஆங்கில மொழித்திறன் பயிற்சி

வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை யில் இன்று முதல் எதிர்வரும் 3 ஆம் திகதி வரை காலை 8.30 தொடக்கம் பிற்பகல் ஒரு மணி வரை யாழ்.சின் மயா மிஷன் அனுசரணையில் ஆங்கில மொழித்திறன் விருத்திக்கான பயிற்சி செயற்றிட்டம் திருமதி ஏ.ஒல்கா என்பவ ரால் நடத்தப்படவுள்ளது. இந்த நிகழ்வில் குறித்த பாடசாலையில் 2012, 2013 ஆம் ஆண்டு ஜி.சீ.ஈ. உயர்தர பரீட்சைக் குத் தோற்றிய மாணவர்களை கலந்து கொள்ளுமாறு அதிபர் கேட்டுள்ளார்.

## கூட்டம் நாளை

யாழ்ப்பாணம், நவ.28
யாழ்.மாவட்ட கால்நடை வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத்தின் மாதாந்தக் கூட்டம் நாளை வெள் ளிக் கிழமை காலை 9.30 மணிக்கு திருநெல் வேலியில் உள்ள சமாச அலுவலக கேட் போர் கூடத்தில் இடம்பெறும் என்று சமாசத் தலைவர் செ.சுப்பிரமணியம் அறிவித்துள்ளார். (வ-9)

# கைதிச் சாரணருக்கு சின்னம் சூட்டப்பட்டது


*யாழ். சிறைச்சாலையில்*



யாழ்ப்பாணம், நவ.28
கைதிகளுக்கு புனர்வாழ்வு அளிக்கும் நோக்குடன் சார ணர் குழுவை உருவாக்கி அவர்களுக்குச் சின்னம் சூட் டும் நிகழ்வு கடந்த ஞாயிற்றுக் கிழமை யாழ். சிறைச்சாலை யில் இடம்பெற்றது.
சிறைச்சாலையில் உள்ள 10 கைதிகள் சாரணர்களாகத் தெரிவு செய்யப்பட்டு சின்னம் சூட்டி அறிமுகப்படுத்தப்பட்டனர். யாழ். சிறைச் சாலையில் முதல் முறையாக ஏற்பாடு செய்யப்பட்ட இந்த நிகழ்வு சிறைச்சாலை அத்தி யட்சகர் பெரேரா தலைமை யில் நடைபெற்றது.
இந்த நிகழ்வில் சிறைச்சாலை ஆணையாளர் நாயகம் சந்தி ரரட்ண, பல்லேகம, யாழ். மாவட்ட சாரண ஆணை யாளர் தேவரஞ்சன் மற்றும் சிறைச்சாலை ஆணையாளர் கள் கலந்துகொண்டு சாரணர் களுக்குசின்னம்சூட்டினர். (வ-14)

# குளங்களைப் புனரமைக்கக் கோரி மன்னார் விவசாயிகள் வலியுறுத்து

*விவசாய அமைச்சருடனான சந்திப்பில்*




யாழ்ப்பாணம், நவ.28
மன்னார் மாவட்டத்தில் குளங் களை உரிய முறையில் புனர மைத்து மக்கள் பாவனைக்கு வழங்குவதற்குரிய நடவடிக் கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என்று அந்தப் பகுதி விவசாயிகளால் விவ சாய அமைச்சிடம் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.
மன்னார் உயிலங்குளத்தில் அமைந்துள்ள மாவட்ட விவசாய பயிற்சி நிலையத்தில் நேற்று முன்தினம் காலை 9 மணி முதல் மதியம் 1.30 மணி வரை யில், வடமாகாண விவசாய அமைச்சர் பொ.ஐங்கரநேசன், வடமாகாண மீன்பிடி அமைச் சர் பா.டெனீஸ்வரன், வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக் கலநாதன் மற்றும் மாகாண சபை உறுப்பினர் ஜி.குண சீலன் ஆகியோருக்கும் விவ சாயிகளுக்கும் இடையில் கலந் துரையாடல் இடம்பெற் றது.
இதன்போது மன்னார் மாவட் டத்திலுள்ள விவசாயிகள் மற் றும் கால்நடை வளர்ப்போர் எதிர்நோக்குகின்ற பல்வேறு பிரச்சினைகளை அவர்கள் முன் வைத்தனர்.
குறிப்பாக நானாட்டான், முசலி, மாந்தை மேற்கு பிர தேச செயலாளர் பிரிவுக்குட் பட்ட பகுதிகளிலுள்ள கால் நடை வளர்ப்போர் தமது கால் நடைகளுக்கான மேய்ச்சல் நிலங்கள் இல்லாமையால் தாங்கள் எதிர்நோக்குகின்ற பிரச்சினைகள் தொடர்பில் முன்வைத்ததோடு தமது கால்நடைகளுக்கான உரிய மேய்ச்சல் நிலத்தை ஒதுக்கித் தர நடவடிக்கை எடுக்குமாறு கோரிக்கை விடுத்தனர்.
இதேவேளை விவசாய உரம் மற்றும்விவசாயிகளுக்குமானிய அடிப்படையில் கிடைக்கப் பெறுகின்ற உதவிகள் உரிய முறையில் கிடைப்பதில்லை எனவும், விவசாய நடவடிக் கைகளுக்காக பயன்படுத்தப் படுகின்ற குளங்கள் உரிய முறையில் புனரமைப்புச் செய்யப்படாத நிலையில் உள்ளதாகவும், அவற்றை அடை யாளம் கண்டு புனரமைப்புச் செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் விவசாயி கள் சார்பில் கோரிக்கை விடுக் கப்பட்டுள்ளது. (வ-5-12)

# நுணசை வித்தியாலயத்தில் ஆசிரியர் பற்றாக்குறை

யாழ்ப்பாணம், நவ.28
20 வருடங்களின் பின்னர் மீள இயங்கும் மாதகல் நுணசை வித்தியாலயத்தில் பிரதான பாடங்களுக்கு ஆசிரி யர் இல்லாத காரணத்தால் மாணவர்கள் குறித்த சில பாடங்களைக் கற்க முடியாத சூழ்நிலைக்கு தள்ளப்பட்டுள் ளனர்.
குறித்த பாடசாலை இடப்பெயர் வின் பின்னர் 20 வருடங் களின் பின்னர் மீள இயங்க ஆரம்பித்துள்ளது. இந்த நிலை யில் மாதகல் பிரதேசத்தைச் சேர்ந்த பெருபாலான மாண வர்கள் குறித்த பாடசாலை யிலேயே கல்வி கற்கின்றனர். சொந்த இடத்தில் பாடசாலை மீள ஆரம்பிக்கப்பட்டதால் அதிக மாணவர்கள் நன்மை யடைந்துள்ளனர். எனினும் பிரதான பாடங்களுக்கு ஆசிரி யர்கள் இல்லாத நிலையே காணப்படுகிறது.
குறிப்பாக ஜி.சீ.ஈ. சாதாரண தரத்துக்கு விஞ்ஞானம், வரலாறு போன்ற பிரதான பாடங்களுக்கு ஆசிரியர்கள் நியமிக்கப்படவில்லை. அத்து டன் மாணவர்களின் எண்ணி கைக்கு ஏற்ப ஆசிரியர்களும் கடமையில் இல்லை.
ஆசிரியர் பற்றாக்குறையைக் காரணம் காட்டி பெற்றோர் தமது பிள்ளைகளை வேறு பாடசாலைகளில் சேர்ப் பதற்கான முயற்சிகளையும் மேற்கொண்டு வருகின்ற னர்.
குறித்த பாடசாலையில் மிக வும் திறமையுடைய மாண வர்கள் கல்வி பயின்று வரும் நிலையில் அவர்களது திறமை களும் மழுங்கடிக்கப்படுவது டன் பரீட்சையில் பின்ன டைவை எதிர்கொள்ள நேரிட் டுள்ளது.
எனவே மாணவர்களது எதிர் காலக் கல்வியைக் கருத்தில் கொண்டு ஆசிரியர் பற்றாக் குறையை நிவர்த்தி செய்யு மாறுபிரதேச மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (வ-14)

# மன்னார் நகரில் கடைத் தொகுதி

*நகர சபை உறுப்பினர் தெரிவிப்பு*



மன்னார் நகரப்பகுதியில் அமைந்துள்ள சிறுவர் பூங்கா வுக்கு அருகில் பல லட்சம் ரூபா செலவில்கடைதொகுதியொன்று அமைக்கப்பட்டு வருவதாக மன்னார் நகர சபை உறுப் பினர் இரட்ணசிங்கம் கும ரேஸ் தெரிவித்தார்.
இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது:-
மன்னார் சிறுவர் பூங்கா வுக்கு அருகில் 40 கடைகள் அமைக்கப்படவுள்ள நிலை யில் முதற்கட்டமாக 21 கடை கள்அமைக்கப்பட்டுவருகின்றன.
ஒவ்வொன்றும் 10 அடி நீள மும் 10 அடி அகலமும் உடை யதாக அமைக்கப்படுகின்றன.
கடை ஒன்றுக்கு ஒரு லட்சத்து 5 ஆயிரம் ரூபா செலவிடப் படுகின்றது. மன்னார் நகர சபைக்கு சொந்தமான வாரச் சந்தைப் பகுதியில் அமைக்கப் பட்டுள்ள கடைகள் அகற்றப் பட்டு புதிதாக அமைக்கப்பட்டு வரும் கடை தொகுதி மாற்றப் பட்ட பின் பழைய சந்தைப் பகுதி வாராந்த பொது சந்தை யாக மாற்றப்படவுள்ளது.
கடை ஒன்றுக்கு 5 லட்சம் ரூபா பெறப்பட்டு மன்னாரை நிரந் தர வதிவிடமாகக் கொண்ட வியாபாரிகளுக்கு கடைகள் நிரந்தரமாகவழங்கப்படவுள்ளன.
எதிர்வரும் கிறிஸ்மஸ் பண்டி கைக்காலத்தில் உள்ளூர் மற்றும் வெளி யூர் வியாபாரி களுக்கு தினங்களுக்கு உரிய அனுமதியை மன்னார் நகர சபை வழங்கவுள்ளது- என் றார். (எ-12)

## ஆலயக் காணியை மீட்டுத் தருமாறு கடிதம்

*அரச அதிபருக்கு கரும்புத் தோட்ட பிள்ளையார் ஆலய நிர்வாகத்தினர் கையளிப்பு*

கிளிநொச்சி ஸ்கந்தபுரம் கரும் புத் தோட்ட பிள்ளையார் ஆல யக் காணியை இராணுவத்தின ரிடமிருந்து மீட்டுத் தருமாறு ஆலய நிர்வாகத்தினர் கடிதம் ஒன்றை கிளிநொச்சி அரச அதி பரிடம் கையளித்துள்ளனர்.
அந்தக் கடிதத்தில் மேலும் தெரிவித்ததாவது:-
ஏற்கெனவே 200 ஏக்கர் கரும்புத் தோட்டக் காணியில் இராணுவம் நிலை கொண் டுள்ள போதிலும் பிள்ளையார் ஆலயத்துக்குரிய காணியும் இராணுவத்தின் பிடியில் இருக் கின்றன.
1963 ஆம் ஆண்டு இந்த ஆலயம் உருவாக்கப்பட்டதி லிருந்து இந்தக் காணி ஆல யத்துக்குரியதாக இருந்துள் ளது - என்றுள்ளது. (எ-18)

# மக்களின் உணர்வுகளை பலாத்காரமாக தடுக்காதீர்

## அரசிடம் கோருகிறார் வடக்கு முதலமைச்சர்

யாழ்ப்பாணம், நவ. 28

மக்களின் உணர்வு பூர்வமான உணர்ச்சிகளை இராணுவத்தின் மூலமாகவோ, பலாத்காரமாகவோ,வன்முறை மூலமாகவோ தடுத்து நிறுத்த நினைத்தால் அதன் தாக்கம் வருங்காலத்தில் மிகப் பெரிய விளைவைக் கொடுக்கும் என்பதை அரசு மனதில் வைத்திருக்க வேண்டும் என்று வடமாகாண முதலமைச்சர் க.வி. விக்னேஸ்வரன் தெரிவித்தார்.

மாவீரர் தினத்தை முன்னிட்டு வடக்கு மாகாணக் கல்வி அமைச்சரின் பிரத்தியேக அலுவலகத்தில் நேற்று மரநடுகை நிகழ்வு இடம்பெற்றது. இதில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே முதலமைச்சர் இவ்வாறு கூறினார்.

முன்னதாக வடக்குமாகாண சபையினால் நேற்று தந்தை செல்வா ஞாபகார்த்த சதுக்கத்தில் நடத்தப்படவிருந்த மரம் நாட்டும் விழா தவிர்க்கமுடியாத காரணத்தினால் கைவிடப்பட்டதாக முதலமைச்சர் அறிவித்திருந்தார்.

"வடக்குமாகாணத்தில் 26ஆம், 27ஆம் திகதிகளில் எந்த நிகழ்வுகளிலும் பொலிஸார் பங்குபற்றக்கூடாது என ஜனாதிபதி அலுவலகத்தில் இருந்து ஆணைபிறப்பிக்கப்பட்டுள்ளதாகவும் அதனால் எமது பாதுகாப்பு நடவடிக்கைகளில் ஈடுபடமுடியாது என்றும் அப்படி ஈடுபட்டால் தண்டனைக்கு உள்ளாவோம் என்றும் பொலிஸார் எனக்கு தெரியப்படுத்தியிருந்தனர். என்னால் அவர்கள் தண்டிக்கப்பட கூடாது என்பதற்காக இந்த மரநடுகைத் திட்டம் கைவிடப்பட்டுள்ளது." என்று முதலமைச்சர் அறிவித்திருந்தார். இதனால் அந்த நிகழ்வு நேற்று இடம்பெறவில்லை.

ஆயினும் அதற்கு மாறாக நேற்று மாகாண கல்வி அமைச்சர் குருகுலராஜாவின் அலுவலகத்தில் நடைபெற்ற மரம் நடுகை நிகழ்வில் முதலமைச்சரும் கலந்துகொண்டார்.

அங்கு உரையாற்றிய முதலமைச்சர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

எங்களுடைய காணிகளில் - தனிப்பட்ட காணிகளில் மரங்களை நாங்கள் நடுவதை எந்த அரசாலும் தடுத்து நிறுத்த முடியாது.

எங்களுடைய வாழ்க்கையில் இளைஞர் சமுதாயம் ஒரு மேம்பாடு பெற வேண்டும் என்பதற்காகவே இந்த மரங்களை நாம் நடுகிறோம். அத்துடன் வாழ்க்கையில் மறுமலர்ச்சியை எடுத்துக் காட்டவும் இந்த மரங்களை நடுகிறோம்.

வடமாகாணத்தின் ஏ-9 வீதியில் இரண்டு பக்கங்களும் இருந்த மரங்கள் இன்று காணாமல் போய் விட்டன. காடுகளாக இருந்த இடங்கள் வெறுந் தரைகளாக போய் விட்டன. அது எப்படிப் போனது? எங்கே போனது? யார் கொண்டு போனார்கள்? என்பதற்கு தனியான விசாரணை மேற்கொண்டால் தான் தெரிய வரும். எனவே இனிப் புதிய மரங்கள் தேவையாகவுள்ளன. அழிந்த மரங்களைத் திருப்பி வரவழைக்க வேண்டும்.

வருங்காலத்தில் நல்ல எண்ணத்தோடு இளைஞர் சமுதாயம் மேம்பட வேண்டும்.

இறந்த ஆத்மாக்கள் சாந்தி அடைய வேண்டும் என நினைத்துக் கொண்டு அதே நேரத்தில் ஒரு புதிய உலகுக்கு அடையாளமாகவும் இந்த மரங்களை நடுகின்றோம். ஆனால் அரசு இதனை நிறுத்தியுள்ளது. அரசு இதனைக் குறுகிய பார்வையில் பார்ப்பதால் தடுத்துள்ளது.

எங்களுடைய காணிகளில், தனிப்பட்ட காணிகளில் நாங்கள் மரங்களை நடுவதற்கு எந்த அரசும் தடுக்க முடியாது. எங்களுடைய காணியில் எங்களுடைய வீட்டில் மரங்களை நட்டிருக்கிறோம். இது எங்களுடைய உள்ளத்தைப்பொறுத்து உணர்வுகளைப் பொறுத்தது. ஆகவே எங்களுடையஉணர்ச்சிகளைப் பிரதிபலிக்கும் இந்த மாதிரியான விடயங்களை தடுக்க நினைத்தால் அதன் தாக்கம் மிகவும் மோசமானதாக இருக்கும் என்பதை அரசு கணக்கில் எடுக்க வேண்டும்.

ஏனென்றால் மக்களுடைய உணர்வு பூர்வமான சில விடயங்களை நாங்கள் இராணுவத்தின் ஊடாகவோ,பலாத்காரத்தின் ஊடாகவோ நிறுத்த முடியாது.

அதனைத் தடுத்து நிறுத்த நினைத்தால் விளைவு பெரிதாகத் தான் கிடைக்கும். பந்தை நீரில் அமிழ்த்தினாலும் அது மேலே தான் வரும். அதனைப் போன்று தான் மக்களது உணர்வுகளும். அடக்கப்பட்டால் அதன் விளைவு பெரிதாகத் தான் இருக்கும் - என்றார். (த-14)

**வீடு வாடகைக்குத் தேவை**

யாழ் பல்கலைக்கழகத்தை அண்மித்த சூழலில் நான்கு அறைகளைக் கொண்ட வீடு வாடகைக்குத் தேவை.

தொடர்புக்கு: 077 3386543

(40536) (10)

**உதயன்**
விளம்பரத் தொடர்புகளுக்கு
advt@uthayan.com
0215671111

**சாதனையாளரை ஆசீர்வதியுங்கள்**

சிவபூமி பாடசாலை மாணவர்கள் மூவர் ஆசிய பசுபிக் விசேட ஒலிம்பிக் போட்டிக்கு அகில இலங்கை ரீதியில் தெரிவாகி நாளை (29.11.2013) வெள்ளிக்கிழமை ஆஸ்திரேலியாவில் நடைபெறும் போட்டியில் பங்கு பற்றுவதற்கு பயணமானார்கள் இவ் வரலாற்று நிகழ்ச்சியில் பங்கு பற்றும் எமது மாணவர்கள் வெற்றிபெற உங்கள் அனைவரது ஆசீர்வாதத்தையும் வாழ்த்தையும் வேண்டுகிறோம்.



சிவபூமி பாடசாலையின் ஸ்தாபகர் கலாநிதி . ஆறு. திருமுருகன், திருமதி கலைவாணி குகதாசன்(அதிபர்), திருமதி S. பவளமணி (உபஅதிபர்), இலங்கை விசேட ஒலிம்பிக் முகாமையாளர் திரு. S. பிரான்சிஸ்போல் வெலாங்கொட, பங்குபற்றும் மாணவர்கள்.



சி. தனுஷன்
இ. கிரோன்பிறைக்னோ
சி. துஷயந்தன்



(13852)(10.14)

ஆறு திருமுருகன்
(தலைவர்)

அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர்கள்.

நிர்வாக சபையினர்
சிவபூமி அறக்கட்டளை, கோண்டாவில்

## யானை, கரடி நடமாட்டம் அதிகரிப்பு

முல்லைத்தீவு, துணுக்காய் பிரதேச செயலர் பிரிவுக் கிராமங்களுக்குச் செல்லும் காட்டுப் பாதையில் யானை, கரடிகளின் நடமாட்டம் அதிக ரித்துக் காணப்படுவதால் காட் டுப் பாதையூடாகச் செல்லும் மக்கள் அச்சத்துடன் பயணத்தை மேற்கொள்வதாகத் தெரிவிக்கின்றனர். துணுக்காய் பிரதேசத்தில் ஒரு கிராமத்தில் இருந்து இன்னொரு கிராமத்துக் குச் செல்வதற்கு காட்டுப் பாதையூடாகவே சென்று வருகின்றனர்.

இந்தப் பிரதேசத்தில் பாதை அமைந்த காட்டுப் பகுதியில் தற்போது யானை, கரடிகளின் நடமாட்டம் அதிகரித்துக் காணப் படுகின்றது. (எ-18)

## மரண அறிவித்தல்கள்

### திருமதி மனோன்மணி விசுவரத்தினம்



அளவெட்டி தெற்கைப்பிறப்பிடமாகவும் ஒட்டுமடத்தை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி மனோன்மணி விசுவரத்தினம் நேற்று முன்தினம் (26.11. 2013) புதன்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவரான வீரவாகு விசுவரத்தினத்தின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான முருகேசு-கனகம்மா தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான வீரவாகு -கனகம்மா தம்பதியரின் அன்பு மருமகளும், வீரபாகு (தேவன்), ரவீந்திரன், கெங்காதரன், றங்கநாதன் (சுவிஸ்), ஈஸ்வரன் (சுவிஸ்) ஆகியோரின் பாசமிகு தாயும், பிறேமராணி, புஸ்பராணி, தேவகலா (சுவிஸ்), செல்வரஞ்சினி (சுவிஸ்) ஆகி யோரின் அன்பு மாமியும், குமணன் (U.K), குணாளன் (U.K), பிராமினி, சாளினி (கனடா), தர்சினி, மகிழினி, ஹிஷாயினி(சுவிஸ்). ஹிஷாந், உமாகாந்த், ஹபிலன் (கனடா) ஆகியோரின் அன்பு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (28.11.2013) வியாழக்கிழமை பி.ப. 2.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன் மணல் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உற வினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

13/3, சேச்லேன், ஓட்டுமடம், யாழ்ப்பாணம்.

தகவல்: குடும்பத்தினர்.
021 2222885
021 221 9730

### திருமதி றோசம்மா அந்தோனிப்பிள்ளை



யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும் இல. 32 கடற்கரை வீதி, குருநகரைப் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி றோசம்மாஅந்தோனிப்பிள்ளை நேற்று (27.11.2013) புதன்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பிலிப்பையா மரியாச்சி தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்ற அந்தோனிப்பிள்ளையின் அன்பு மனைவியும், லூர்த்தம்மா, அகஸ்ரீனம்மா (பொன்மலர்) ஆகியோரின் பாசமிகு தாயும், பிரான்சிஸ், இராஜேந்திரம் ஆகியோரின் பாசமிகு மாமியும், விஜயகுமார், கீதா, அன்ரன் பிறிம்சன் கலா, காலஞ்சென்ற றாஜன் மற்றும் மோகன், காலஞ்சென்ற றஜனி மற்றும் ஜெகன், நந்தினி, பகீரதன் நிறஞ்சினி ஜெயந்தியா, லெஸ்லி, ஜெய கரன்-றெபேக்கா, மரியராசா ஜெய்சாந்தினி (ஆசிரியை சுண்டுக்குழி மகளிர் கல்லூரி), பிரபாகரன் (பிரதேச செயலகம்-பளை), யூப்பிரேசியா ஆகியோரின் அன்புப் பேர்த் தியும், நிஷாந்திவ்யா, றஜன் நிஷானா, றேகா, கபில்ரன், எமில்ரன், துளசி, றுக்சன், மதுஷா, மதுநிகேஷ், சபினா, அர்ச்சனா, யோயல்வளன், வெஸ்னா ஆகியோரின் பாசமிகு பூட்டியும், தனுஷா, லக்சியா ஆகியோரின் பாசமிகு கொப்பாட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (28.11.2013) வியாழக்கிழமை பி.ப. 3.30 மணியளவில்காணிக்கைமாதா தேவ ஆலயத்தில் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்பட்டு பூதவுடல் கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலைக்கு நல்லடக் கத்துக்காக எடுத்துச் செல்லப்படும்.இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இல. 25, கடற்கரை வீதி, குருநகர்.

தகவல்: குடும்பத்தினர்.

"கர்த்தருடைய பரிசுத்தவான்களின் மரணம் அவர் பார்வைக்கு அருமையானவை" (சங்கீதம் 116:15)

## மரண அறிவித்தல்

### இளையதம்பி நடராஜா (ஆறுமுகம்)



சுதுமலை வடக்கைப் பிறப்பிடமாகவும், மேதர்ஸ் லேன், மானிப்பாயை வசிப்பிடமாகவும் கொண்ட இளையதம்பி செல்லாச்சியின் அன்பு மகன் இளையதம்பி நடராஜா (ஆறுமுகம்) நேற்று (27.11.2013) புதன்கிழமை கர்த்தருக்குள் நித்திரை அடைந்து விட்டார்.

அன்னார் இராசலட்சுமியின் அன்புக் கணவரும், லிங்கேஸவரி, பதமதேவா, சிவனேஸ்வரி, பத்மராஜா, காலஞ்சென்ற கமலேஸ்வரி மற்றும் பத்மசூரியா, பத்மசேகரா, பத்மசீலன் (பிரான்ஸ்), ஆகியோரின் அன்பு தந்தையும், சின்னராஜா, காலஞ்சென்ற உதயா மற்றும் ஆனந்தன், காலஞ்சென்ற கல்யாணி மற்றும் சுரேஸ், சந்திரன் வதனா, ஷகிலா (பிரான்ஸ்) ஆகியோரின் மாமனும் ஆவார்.


அன்னாரின் நல்லடக்க ஆராதனை இன்று (28.11.2013) வியாழக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று, பி.ப 3.00 மணிக்கு பூதவுடல் தாவடி சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

(40539)
(10.14)

தகவல்: பேரப்பிள்ளைகள்.
021 490 2730

## மரண அறிவித்தல்



### முத்தையா பத்மநாதன்

(பாலா அண்ணா - முன்னாள் வியாபாரி மானிப்பாய் மத்திய சந்தை)

மானிப்பாயைப் பிறப்பிடமாகவும், வட்டுக்கோட்டையை வசிப்பிடமாகவும் கொண்ட முத்தையா பத்மநாதன் நேற்று (27.11.2013) புதன் கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான முத்தையா-நேசம் தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான ஆலாலசுந்தரம்-திரவியம் தம்பதியரின் மருமகனும், சரஸ்வதிதேவியின் (ஆசிரியை யா/மயிலிட்டி RCTMS ஆனைக்கோட்டை) அன்புக் கணவரும், குருபரேசன் (A/L மானிப்பாய் இந்துக்கல்லூரி), காலஞ்சென்ற மதுஷன் ஆகியோரின் அன்புத் தந்தையும், சுபத்திரா, இராஜேந்திரம் (சுந்தர்சன்), பத்மினி (தேவி), பிறேம்குமார் (குவைத்), ஜெயசீலன் (நோர்வே) ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (28.11.2013) வியாழக்கிழமை பிற்பகல் 2.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக வழுக்கியாறு இந்து மாயனத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

கலட்டி வீதி, வட்டு தென் மேற்கு,
வட்டுக்கோட்டை.

(40541)
(10.14)

தகவல்: சரஸ்வதிதேவி (மனைவி),
குருபரேசன் (மகன்),
இராசேந்திரம் (சகோதரர்).



# சாவகச்சேரி நகர மண்டபம் ஜனவரி முதல் பாவனைக்கு

*கட்டடப் பணிகள் துரித கதியில்*

தென்மராட்சி, நவ.28
சாவகச்சேரி நகரசபை வளாகத்தில் அமைக்கப்பட்டுள்ள நகர மண்டபக் கட்டடம் எதிர்வரும் ஜனவரி மாதம் பொது மக்களின் பாவனைக்கு விடப்படவுள்ளது.

உள்ளூராட்சி உட்கட்டமைப்பு மேம்பாட்டு நிகழ்ச்சித் திட்ட நிறுவனத்தினரால் கடனடிப் படையில் 45 மில்லியன் ரூபா செலவில் இரு மாடி கட்டடம் நிர்மாணிக்கப்பட்டு பணிகள் பூர்த்தியடையாத நிலையில் நகரசபையிடம் கையளிக்கப்பட்டது.

இந்த நிலையில் பணிகள் பூர்த்தியடையாதிருப்பதனால் பொது மக்களின் பயன்பாட்டுக்கு வழங்க முடியாதுள்ளமை தொடர்பாக ஜனாதிபதியால் கடந்த ஏப்ரல் மாதம் நடத்தப்பட்ட மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் நகரசபைத் தலைவர் இ.தேவசகாயம் பிள்ளை கருத்துத் தெரிவித்த போது உடனடியாக பணிகளை பூர்த்தி செய்ய 10 மில்லியன் ரூபா வழங்குமாறு உத்தரவிடப்பட்டது. இரு வாரங்களின் பின்னர் மாகாண சபையால் நிதி இல்லையென கை விரிக்கப் பட்டது.

அதனையடுத்து சபையின் மாதாந்தக் கூட்டங்களில் எடுத்த தீர்மானங்களின் பிரகாரம் சபை நிதியிலிருந்து கட்டம் கட்டமாக 10 மில்லியன் ரூபா பெறப்பட்டு கட்டடப் பணிகள் நடைபெற்று வருகின்றன. அடுத்த மாதம் பணிகள் நிறைவு பெறவுள்ளதால் தைப்பொங்கல் தினத்தன்று பொது மக்கள் பாவனைக்காக திறந்து வைக்கப் படவுள்ளதாக தெரிவிக்கப்பட்டது. (வ-9)

# விபத்துகளுக்கு காரணம் சாரதிகளின் கவனவீனமே

*கே.கே.எஸ். பொலிஸ் அத்தியட்சகர் கருத்து*

அச்சுவேலி, நவ.27
"வாகனச் சாரதிகளில் பெரும்பாலானோர் போக்குவரத்து நடைமுறை விதிகளை உதாசீனப்படுத்தி சுயநலத்தோடு கூடிய சௌகரிய நிலையில் வாகனங்களை செலுத்துகின்றனர். இதனால் தான் பெரும்பாலான வாகன விபத்துக்கள் ஏற்படுகின்றன.


அனேக சாரதிகள் தொலைபேசியில் உரையாடிய நிலையிலும், பாடல்களை அளவுக்கு அதிகமான சத்தத்து டன் வாகனத்தில் ஒலிக்க விட்டும் வாகனம் ஓட்டுகின்றனர். இதனைதவிர்த்து சமூக நலனைக் கருத்தில் கொண்டு செயற்பட வேண்டும்.

இவ்வாறு தெரிவித்துள்ளார் காங்கேசன் துறை பொலிஸ் பிரிவு பொலிஸ் அத்தியட்சகர் ஏச்.ஏ.தமயந்த ஜெயசிறி.

காங்கேசன்துறை பொலிஸ் பிரிவின் போக்குவரத்துப் பிரிவில் வலி.கிழக்கு பிரதேச சபையின் தலைமை அலுவலக கேட்போர் கூடத்தில் போக்குவரத்து தொடர்பான கலந்துரையாடல் நடத்தப்பட்டது. இதன் போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

இதன் போது பொலிஸ் அத்தியட்சகர் மேலும் தெரிவித்ததாவது:-

வாகனச் சாரதிகளின் அசண்டையீனமே பெரும்பாலான வாகன விபத்துக்களுக்கும் அதுதொடர்பில்ஏற்படும் உயிர் இழப்புகளுக் கும் காரணமாகஅமைகின்றன.



வாகனச் சாரதிகள் சமூக நலன் பொது நோக்கோடு போக் குவரத்து விதி முறைகளை உரிய முறை யில் பின்பற்ற வேண்டும்.

இதன் மூலம் பெருமளவில் விபத்துக் களைத் தடுப்பதோடு அதனால் ஏற்படும் உயிர் இழப்புக்கள், பாதிப்புக்களை இல்லாமல்செய்யலாம். எனவே வாகனச் சராதிகள் பொறுப்போடுநடந்துகொள்ளவேண்டும். வீதிகள் விஸ்தரிக்கப்பட்டு அபிவிருத்தி செய்யப்பட்டிருப்பதோடு குறியீடுகளும், அடையாளங்களும் உரிய முறையில் இடப்பட்டுள்ளன. அதனை பொது மக்களும் பாதசாரிகளும் உரிய முறையில் கடைப் பிடித்து பயணங்களை மேற்கொள்ள வேண்டும். பாடசாலைகளுக்கு முன்பாக காலையிலும் பாடசாலை முடியும் வேளையிலும் பொலி ஸார் கடமையில் நிறுத்தப் படுவர். பொலிஸார் தவறு விடும் சந்தர்ப்பங்களில் அது தொடர் பான முறையீடுகளை பொது மக்கள் மற்றும் பாதிக் கப்படுவோர்மேற்கொள்ளலாம். பொலிஸ்- பொது மக்கள் நல்லுறவு மேல் நிலை பெற வேண்டும் - என்றார். (வ-11)

# காணியில் இருந்த இரும்புக்கதவு மாயம்

தென்மராட்சி, நவ.28
காணிப் பாதுகாப்புக்கு பொருத்தப்பட்டிருந்த இரும்புக் கதவு இனந்தெரியாதோரால் இரவோடிரவாக அகற்றப்பட்டுள்ளது.

கைதடிப் பகுதியில் கடந்த திங்கட்கிழமை நடந்த இந்தச் சம்பவம் தொடர்பாக சாவகச்சேரி பொலிஸாரால்

நீதிமன் றில் அறிக்கை தாக்கல் செய் யப்பட்டுள்ளது.

இதேவேளை சாவகச்சேரி நகர்ப் பகுதி தனியார் மருந்தகம் முன்பாக மோட்டார் சைக்கிளை விட்டுவிட்டு மருந்து வாங்கச் சென்ற உத்தியோகத்தரின் கைப்பை மோட்டார் சைக்கிளிலிருந்து அபகரிக்கப் பட் டுள்ளது.

கைப்பையினுள் உத்தியோகத் த ரின் சம்பளப் பணம் உட்பட முக்கிய ஆவணங்கள் இருந்தன என்று சாவகச்சேரி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள் ளது. (ஓ-9)

# நவாலி கர்ப்பிணிகள் கிளினிக் மானிப்பாயில்

நவாலி, நவ.28
நவாலி வை.எம்.சி.ஏ. மண்டபத்தில் நீண்ட காலமாக இயங்கி வந்த கர்ப்பிணிகள், குழந்தைப் பிள்ளைகள் கிளினிக் தற்காலிகமாக மானிப்பாய் அரசினர் வைத்திய சாலையில் இயங்குகின்றது.

நிரந்தர இடவசதியின்மை காரணமாக குறித்த கிளினிக்கின் சில பிரிவுகள் நவாலி முருகமூர்த்தி ஆலய அன்னதான மண்டபத்திலும், முருகானந்தா சனசமூக நிலைய மேல்மாடியிலும் செயற்பட்டு வருகின்றன. (வ-100)

# டெங்கொழிப்பில் அனைவரும் ஒன்றிணைந்து செயற்படுக

*கோப்பாய் வைத்திய அதிகாரி வேண்டுகோள்*

அச்சுவேலி, நவ.28
"டெங்கு ஒழிப்பு மற்றும் பொதுச் சுகாதாரச் செயற்பாடுகளில் சமூக நலனைக் கருத்தில் கொண்டு எல்லோரும் தாமாக முன்வந்து கூட்டாகச் செயற்பட வேண்டும். இதன் மூலம் தங்களையும் சமூகத்தையும் பாதுகாத்துக் கொள்வதோடு உயிர் இழப்புக்களை யும் தவிர்த்துக் கொள்ளலாம்" என்று வலி.கிழக்கு கோப்பாய் பிரதேச சுகாதார வைத்திய அதிகாரி எஸ்.ஜெயசீலன் தெரிவித்தார்.

வலி.கிழக்கு பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் பிரதேச செயலர் எம்.பிரதீபன் தலைமையில் நடைபெற்ற கலந்துரையாடலின் போது அவர் மேலும் தெரிவித்த தாவது:-

டெங்கு உயிர்கொல்லி நோய் நுளம்பின் மூலம் பரவுகின் றது. நுளம்பு பெருகுவதற்கான சூழலை இல்லாமல் செய்வது ஒவ்வொருவரின்கடமைபொறுப் பாகும். இந்தவிடயத்தில்சுயவிருப்பத்தோடு செயற்பட வேண்டும்.

வலி.கிழக்கில்டெங்குநோய்கட்டுப் பாட்டுக்கான செயற்பாடு களில் சகல தரப்பினரது ஒத் துழைப்பும் கிடைக்கின்றது. இது வரவேற்கத்தக்கது - என்றார்.(வ-11)



அனலைதீவு தெற்கு அ.த.க. பாடசாலையில் தரம்- 5 புலமைப்பரிசில் பரீட்சையில் சித்திபெற்ற 3 மாணவர்களுக்கு அண்மையில் பாடசாலை சமூகத்தினரால் பாராட்டு விழா நடத்தப்பட்டது. கனடாவில் உள்ள அனலைதீவு வாழ் மக்களின் அமைப்புகளால் சைக்கிள்கள் மற்றும் பணப் பரிசில்களும் வழங்கப்பட்டன. அனலைதீவு வடலூர் அ.த.க. பாடசாலையில் சித்தி பெற்ற 2 மாணவர்களுக்கும் கனடா அமைப்புகளால் சைக்கிள் மற்றும் நிதி உதவி வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# தீவகக் கோட்டங்களை வலுவூட்ட நடவடிக்கை


யாழ்ப்பாணம், நவ.28
ஊர்காவற்றுறை, காரைநகர் கோட்டக் கல்வி அலுவலகங்களுக்குத் தேவையான முக்கிய உபகரணங்களை வழங்கியதன் மூலம் குறித்த இரு அலுவலகங்களை வலுவூட்ட நடவடிக்கை எடுத்துள்ளதாக தீவக வலயக் கல்விப் பணிப்பாளர் ரி.ஜோன் குயின்ரன் தெரிவித்தார். (வ-7)

# நல்லூர் வருமானப் பகுதி விரைவில் கணினிமயம்

யாழ்ப்பாணம், நவ.28
நல்லூர் பிரதேச சபையின் வருமானப் பகுதியை கணினிமயப்படுத்தும் திட்டம் ஆரம்பிக்கப்படவுள்ளதாக பிரதேச சபைத் தலைவர் ப.வசந்தகுமார் தெரிவித்தார்.

ஆசியன் மன்றத்தின் உதவியுடன் நல்லூர் பிரதேசசபையின் நிதியும் இதற்குப் பயன்படுத்தப்படவுள்ளது.

எதிர்வரும் ஜனவரியில் இருந்து கணினி மயப்படுத்தும் திட்டம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது. இதனால் மக்களுடனான பணிகள் இலகுவாக்கப்படும் என்றும் அவர் மேலும் குறிப்பிட்டார். (வ-7)



# வருமான வரி விவரத் திரட்டை சமர்ப்பிக்க இறுதி நாள் நவ.30

*பிராந்தியப் பிரதி ஆணையாளர் அறிவிப்பு*

யாழ்ப்பாணம், நவ.28
வருமான வரி செலுத்துவோர் வரி மதிப்பீட்டாண்டான 2012/2013 ஆம் ஆண்டுக்கான வருமான வரி விவரத் திரட்டுக்களை எதிர்வரும் 30 ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் உரிய வரி கொடுப்பன வுக்கான பணம் செலுத்தும் படிவத்துடன் உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தில் சமர்ப்பிக்க வேண்டுமென உள்நாட்டு இறைவரித் திணைக்கள யாழ்.பிராந்திய பிரதி ஆணையாளர் பா.சிவாஜி அறிவித்துள்ளார்.

உள்நாட்டு இறைவரிச் சட்டத்தின் 106 (I) ஆம் பிரிவின் கீழ் இந்த மாதம் 30 ஆம் திகதிக்கு முன்னர் வரி மதிப்பாண்டு 2012/2013 க்கான வருமான வரித்திரட்டுக்களை சமர்ப்பித்தல் வேண்டும். இறைவரித் திணைக்களத்தின் யாழ். பிராந்திய அலுவலகத்தில் வருமான வரிக் கோவைகளை வைத்திருப்போர் யாழ்.பிராந்திய அலுவலகத்தில் சமர்ப்பிக்க வேண்டும். இந்தச் சட்டத் தின்படி வரி மதிப்பாண்டுக்கான வரிக்கொடுப்பனவுகளை கடந்த செப்ரெம்பர் மாதம் 30 ஆம் திகதிக்கு முன்னர் செலுத்த வேண்டும்என்று வருமானவரி செலுத்துவோருக்கு ஏற்கெனவே அறிவிக்கப்பட்டிருந்தது.

எவ்வாறாயினும் இதுவரை வரியை செலுத்தாதவர்கள் அதனை உரிய முறையில் இலங்கை வங்கியில் செலுத்தி வரி விவரத் திரட்டுடன் சமர்ப்பிக்க வேண்டும். இந்த சட்டத் தின்படி வியாபாரம் அல்லது வர்த்தக இலாபங்கள் மற்றும் வருமானங்களை வெளிப்படுத்துவோர் வரி விவரத் திரட்டுடன் தமது நிதி ஆண்டுக்கான இறுதிக் கணக்குக் கூற்றையும் இணைக்க வேண்டும். இது தொடர்பில் பிரச்சினைகள் ஏதும் இருக்குமாயின் பிரதி ஆணையாளருடன் கலந்து ஆலோசிக்கலாம். மேற்படி வரி மதிப்பாண்டுக்கான வருமான வரிக்கு பொறுப்புடையவர்களாக இருந்தும் இதுவரை வரிக் கோவைகளைவைத்திருக்காதவர்களும் தாமாக முன்வந்து வரிக் கோவைகளைத் திறக்கலாம். இவ்வாறு திறந்து உரிய வரிகளைச் செலுத்தி வரி விவரத் திரட்டுக்களை குறித்த திகதிக்கு முன்னர் சமர்ப்பிப்பதற்குரிய விசேட ஏற்பாடுகளும் செய்யப் பட்டுள்ளன. புதிதாக வரிசெலுத்த முன்வருவோரில் கடந்த கால வருமான விவரங்களைப் பற்றி எதுவும் கோரப்படமாட் டாது.

வரியைச் செலுத்தாமல் அன்றி வரி விவரத் திரட்டை சமர்ப்பிக்காமலோ தட்டிக்கழிக்கப் படும் இடத்து தண்டப் பணம் அறவிடுவதற்கான ஏற்பாடுகளுக்கும் உள்நாட்டு இறைவரிச் சட்டத்தில் இடமுண்டு. நவம்பர் 30 ஆம் திகதி சனிக்கிழமை எமது அலுவலகம் திறந்திருக்கும் என்பதுடன் யாழ்.பிராந்திய அலுவலகம் அமைந்துள்ள யாழ்.வீர சிங்கம் மண்டபத்தின் கீழ் மாடித் தளத்தில் எதிர்வரும் 30 ஆம் திகதி காலை 8.30 தொடக்கம் மாலை 5 வரை வருமான வரி திரட்டுக்களைச் சமர்ப்பிப்பதற்குரிய விசேட கரும பீடமொன்றை அமைப்பதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. எனவே உரிய வேளையில் வரிக் கொடுப்பனவுடன் வரி விவரத்திரட்டையும் சமர்ப்பித்து தண்டப்பணம் செலுத்துவதனைத் தவிர்த்துக் கொள்ளுமாறு அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ஓ)

# பயணிக்க முடியாத நிலையில் பொற்பதி வீதி

கொக்குவில் கிழக்கு, பொற்பதி வீதி மிகவும் மோசமான முறையில் சேதமடைந்து பயணிக்க முடியாத நிலையில் காணப்படுகின்றது.


தினமும் ஆயிரக்கணக்கான பாடசாலை மாணவர்கள், பல்கலைக்கழக மாணவர்கள், பொதுமக்கள் எனப் பலரும் பயணிக்கும் குறித்த வீதி குன்றும் குழியுமாகக் காணப்படுகின்றது. இதனால் மழை காலத்தில் வெள்ளம் தேங்கி நிற்கின்றது. உரிய திணைக்களம் குறித்த வீதியைப் புனரமைக்க எந்தவித நடவடிக்கையும் மேற் கொள்ளாது கண்மூடித்தனமாக இருப்பதாக பொதுமக்கள் குற்றம் சாட்டுகின்றனர். (வ-86)

## மதுவினால் பறிபோனது உயிர்

சென்னை, நவ.28
சேலம் மாவட்டத்தில் மது அருந்துவதில் கணவனுக்கும் மனைவிக்கும் இடையே ஏற்பட்ட தகராறால் மனைவி பரிதாபகரமாக உயிரிழந்தார்.
சேலம் மாவட்டம் ஏற்காட்டை அடுத்துள்ள பெலாக்காடு கிராமத்தை சேர்ந்த விவசாயி வெள்ளையன் (45). அவரது மனைவி வெள்ளச்சி (42). இவர்கள் இருவருக்கும் மது அருந்தும் பழக்கம் உள்ளது.
நேற்று முன்தினம் வீட்டில் இருந்த வெள்ளையன், வெள்ளச்சி இருவரும் மது அருந்தினர். அப்போது இருவருக்கும் சரியான அளவிலேயே கிண்ணத்தில் ஊற்ற வேண்டும் என்று வெள்ளச்சி கூறியுள்ளார்.
ஆனால் வெள்ளையன் தமக்கு கொஞ்சம் அதிகமாக ஊற்றிக் குடித்துள்ளார். போதை தலைக்கேறிய நிலையில் கணவன் மனைவி இருவருக்கும் இடையே சண்டை ஏற்பட்டுள்ளது. தமக்கும் சமமாக மது ஊற்ற வேண்டும் என்று கேட்ட வெள்ளச்சியிடம், வெள்ளையன் தகராறு செய்துள்ளார்.
இருவருக்கும் இடையே வாய்த் தகராறு முற்றிக் கை கலப்பு ஏற்பட்டது. ஆத்திரம் அடைந்த வெள்ளையன் அரிவாளால் வெள்ளச்சியை வெட்டியதோடு கழுத்தையும் இறுக்கி உள்ளார். அதனால் சம்பவ இடத்திலேயே வெள்ளச்சி பரிதாபமாக இறந்துள்ளார்.
போதை தெளிந்த நிலையில் நேற்றுக் காலை 8 மணியளவில் வெள்ளையன் பொலிஸாரிடம் சரணடைந்துள்ளார். பொலிஸார் இதுகுறித்த விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ற)

## பாலம் இடிந்து வீழ்ந்ததில் பலர் படுகாயம்

முஷாபர்பூர், நவ.28
பீகார் மாநிலம், முஷாபர்பூரில் பாலம் ஒன்று இடிந்து கீழே பயணித்த ரயில் மீதும் வாகனங்கள் மீதும் வீழ்ந்ததுள்ளது. இந்த விபத்தில் பலர் படுகாயமடைந்துள்ளனர் என்றும் மீட்புப் பணிகள் நடைபெற்று வருகின்றன என்றும் அங்கிருந்து கிடைக்கும் தகவல்கள் தெரிவிக்கின்றன. விபத்தில் ஏற்பட்ட சேத விவரங்கள் குறித்த தெளிவான விவரங்கள் எதுவும் இதுவரை கிடைக்கப்பெறவில்லை. (ற)



ஆந்திராவை நெருங்கும் லெஹர் புயல். நாசாவின் செய்மதிப் படம்.

ஆந்திராவை நெருங்கி வரும் 'லெஹர்' புயல் மிகத் தீவிரம் அடைந்துள்ளது. அந்தமான் தீவருகே நிலைகொண்டிருந்த 'லெஹர்' தற்போது தீவிரமான புயலாக மாறி ஆந்திராவை நோக்கி வேகமாக நகரத் தொடங்கியுள்ளது. 'லெஹர்' இன்று ஆந்திரா ஊடாகக் கடக்கும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. 'லெஹர்' புயல் காரணமாக பெரும் சேதங்கள் ஏற்படும் என்று எதிர்பார்க்கப்படும் நிலையில் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை முழுவீச்சில் ஆந்திர அரசு மேற்கொண்டுள்ளது. (ற)


## மாவோயிஸ்ட் தாக்குதலில் 4 பொலிஸார் சாவு



பிஜபூர், நவ.28
சத்தீஸ்கர் மாநிலத்தின் பிஜபூர் மாவட்டத்தில் நேற்று மாவோயிஸ்டுகள் நடத்திய தாக்குதலில் பொலிஸார் 4 பேர் உயிரிழந்துள்ளனர்.
இதுகுறித்துப் பொலிஸார் கூறும்போது,
"சத்தீஸ்கர் மோடக்பல் பகுதியில் நேற்று மாவோயிஸ்டுகள் பதுங்கி இருப்பதாக கிடைத்த தகவலின் பேரில் அங்கு பொலிஸார் தேடுதல் வேட்டையில் ஈடுபட்டிருந்தனர். அப்போது அவர்களை நோக்கி மாவோயிஸ்டுகள் துப்பாக்கி சூடு நடத்தினர். அதில் 4 பொலிஸார் உயிரிழந்தனர். மேலும் ஒருவர் காயம் காயம் அடைந்துள்ளார்" என்று தெரிவித்துள்ளனர். (ற)

# அதிர்ந்தது இடிந்தகரை

## நாட்டு வெடிகுண்டு வெடித்ததில் 6 பேர் உடல் சிதறிச் சாவு



சென்னை, நவ.28
கூடங்குளம் அணு மின் நிலையத்தின் அருகே உள்ள இடிந்தகரைக் கிராமத்தில் நாட்டு வெடிகுண்டு ஒன்று வெடித்ததில் 6 பேர் உயிரிழந்தனர். இதில் 3 வீடுகள் தரைமட்டமாகின.
இடிந்தகரை சுனாமிக் குடியிருப்புத் தொகுதியிலேயே குண்டு வெடித்துள்ளது. சுனாமிக் குடியிருப்புக்கும் கூடங்குளம் அணு மின் நிலையத்துக்கும் இடையே சுமார் ஒரு கிலோமீற்றர் தூரமே உள்ளது. நேற்றுமுன்தினம் இரவு குடியிருப்புத் தொகுதியில் உள்ள ஓர் வீட்டில் பெரும் சத்தத்துடன் வெடிகுண்டு ஒன்று வெடித்தது. அதில் அந்த வீடு முற்றாகத் தரைமட்டமானது. அருகே இருந்த இரண்டு வீடுகளும் இடிந்து வீழ்ந்தன.
இரவு நேரம் என்பதால் உடனடியாக மீட்பு பணிகள் எதையும் ஊர் மக்களால் மேற்கொள்ள முடியவில்லை. தீயணைப்பு மீட்புப் படையினர் வரவழைக்கப்பட்டனர். வெடிக்காத நிலையில் மேலும் பல நாட்டு வெடிகுண்டுகள் குறித்த வீட்டுக்குள் இருந்ததால் உடனடியாக மீட்பு நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியவில்லை.
குறித்த வீட்டுக்குள் இருந்து தலை மற்றும் கால்கள் இல்லாத நிலையில் ஆண் ஒருவரின் உடல் ஒன்றும், பெண் ஒருவரின் உடல் ஒன்றும் மீட்கப்பட்டன.
குண்டுவெடித்த வீட்டுக்கு அருகே விளையாடிக் கொண்டிருந்த இரு சிறுமிகளும் உயிரிழந்துள்ளனர். அத்துடன் அருகில் இருந்த வீடுகளுக்குள் இருந்த 2 பேர் படுகாயங்களுக்கு உள்ளாகியுள்ள நிலையில் சிகிச்சை பயனின்றி மருத்துவமனையில் உயிரிழந்துள்ளனர். மேலும் சிலரைக் காணவில்லை என்று கூறப் படுகின்றது.
சட்டவிரோதமாகத் தயாரிக்கப்பட்ட நாட்டு வெடிகுண்டே இவ்விதம் வெடித்துள்ளது என்று பொலிஸார் கூறுகின்றனர்.
அதேவேளை, நாட்டு வெடிகுண்டைப் பதுக்கி வைத்தார் என்று குற்றஞ்சாட்டி கூடங்குளம் போராட்டக்குழு ஒருங்கிணைப்புக் குழுவின் தலைவர் உதயகுமார் உள்பட மூன்று பேர் மீது பொலிஸார் வழக்குப் பதிவு செய்துள்ளனர். (ற)


## மோடியின் நாற்காலியின் விலை ரூபா 2.5 லட்சம்

புதுடில்லி, நவ.28
பா.ஜ.க. பிரதம வேட்பாளர் மோடி அமர்ந்த நாற்காலியை ரூபா 2.5 லட்சத்துக்கு ஏலம் எடுப்பதற்கு பா.ஜ.க. நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவர் முன்வந்துள்ளார்.
பா.ஜ.க. பிரதமர் வேட்பாளர் நரேந்திர மோடி கடந்த 21ஆம் திகதி உத்தரபிரதேச மாநிலத்தில் ஆக்ராவில் நடந்த பொதுக் கூட்டத்தில் கலந்து கொண்டு பேசினார். அப்போது அவர் அமர்வதற்காக பிரமோத் உபாத்யாயா என்பவர் விசேட நாற்காலி ஒன்றைத் தயாரித்து கொடுத்தார்.
பொதுக் கூட்டம் முடிந்து நரேந்திர மோடி புறப்பட்டுச் சென்ற பிறகு அவர் அமர்ந்த நாற்காலியை விலை கொடுத்து வாங்க பா.ஜ.க. நாடாளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் நிர்வாகிகளிடையே கடும் போட்டி ஏற்பட்டது.
பலரும் நாற்காலிக்குப் போட்டியிட்ட நிலையில் பா.ஜ.க. நாடாளுமன்ற உறுப்பினர் யோகேந்திரா என்பவர் அந்த நாற்காலிக்கு ரூபா 2.5 லட்சம் கொடுக்க முன் வந்தார். ஆனால் அந்த நாற்காலியை யாருக்கும் கொடுக்க மாட்டேன். நானே வைத்துக் கொள்ளப் போகிறேன் என்று அடம்பிடிக்கின்றாராம் நாற்காலியை வடிவமைத்தவர். (ற)

## சேதுசமுத்திர திட்டத்தை முற்றாக நிறுத்துங்கள்

### தமிழக அரசு நீதிமன்றில் மனு

சென்னை, நவ.28
சேது சமுத்திரத் திட்டத்தை அடியோடு கைவிட வேண்டும் என்று வலியுறுத்தி தமிழக அரசு உயர்நீதிமன்றில் மீண்டும் மனுத்தாக்கல் செய்துள்ளது. உயர்நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ள புதிய பிரமாணப் பத்திரத்திலேயே தமிழக அரசு இந்த கோரிக்கையை மீண்டும் முன்வைத்துள்ளது.



"சேது சமுத்திரத் திட்டத்தைச் செயற்படுத்தினால் மீனவர்களின் வாழ்வாதாரம் பாதிக்கப்படும். மன்னார் வளைகுடாவின் சுற்றுச் சூழலுக்கும் இந்தத் திட்டம் பாதிப்பை ஏற்படுத்தும். லாபம் கருதி சுற்றுச்சூழலைக் கெடுக்க அனுமதிக்க கூடாது. பச்சோரிக் குழு அறிக்கையில் சுட்டிக்காட்டியப்படி சேது சமுத்திரத் திட்டம் பொருளாதார ரீதியில் சாத்தியமற்றது. ராமர் பாலத்தை தேசிய நினைவுச் சின்னமாக அறிவிக்க வேண்டும்" என்று தமிழக அரசு சார்பாக தாக்கல் செய்யப்பட்டுள்ள பிரமாணப் பத்திரத்தில் குறிப்பிட்டுள்ளது.
சேது சமுத்திரத் திட்டத்தை ஏற்கனவே நிர்ணயித்த பாதையில் நிறைவேற்றத் தீர்மானித்துள்ளோம் என்று இந்திய மத்திய அரசு நீதிமன்றில் தெரிவித்திருந்தது. அதற்குப் பதிலளிக்கும் வகையிலேயே தமிழக அரசு புதிய பிரமாணப் பத்திரத்தைத் தாக்கல் செய்துள்ளது. (ற)

## சிறந்த மனிதர் தெரிவில் இடம்பிடித்தார் மோடி

புதுடில்லி, நவ.28
அமெரிக்காவில் இருந்து வெளியாகும் பிரபல 'ரைம்ஸ்' பத்திரிகை நடத்தும் வாக்கெடுப்பில் சிறந்த மனிதருக்கான தெரிவில் இந்தியாவில் இருந்து ஒரே ஒரு அரசியல் தலைவராக நரேந்திர மோடி இடம் பிடித்துள்ளார்.



ரைம்ஸ் பத்திரிகை ஒவ்வொரு ஆண்டும் சிறந்த மனிதர் விருதை வழங்கி வருகிறது. இந்த ஆண்டிற்கான தேர்வு தற்போது நடந்து வருகிறது. இதற்கான பட்டியலில் உலகின் 42 முக்கிய பிரபலங்கள் உள்ளனர். அவர்களில் பா.ஜ.க. பிரதமர் வேட்பாளர் நரேந்திர மோடியும் தெரிவாகியுள்ளார். தற்போதுள்ள நிலையில் அவருக்கு ஆதரவு பெருகி உள்ளது. அதனால், அவர் இந்த ஆண்டின் சிறந்த மனிதராகத் தெரிவு செய்யப்படலாம் என எதிர்பார்ப்பு நிலவுகிறது. விருது குறித்த அறிவிப்பு அடுத்த மாதம் வெளியிடப்பட உள்ளது. (ற)

## சிவாஜியை அகற்றினால் விபரீதமே உண்டாகும்


### எச்சரிக்கின்றார் கருணாநிதி

சென்னை, நவ.28
சென்னை மெரினா கடற்கரைக்கு அண்மையில் அமைக்கப்பட்டிருக்கும் நடிகர் சிவாஜி சிலையை தமிழக அரசு அகற்றுமானால் விபரீதங்கள் உருவாகும் என்று எச்சரித்துள்ளார் தி.மு.க. தலைவர் மு.கருணாநிதி.
மெரீனா கடற்கரைக்கு அண்மையில் அமைக்கப்பட்டிருக்கும் நடிகர் சிவாஜியின் சிலை போக்குவரத்துக்கு இடையூறாகக் காணப்படுகின்றது என்று நீதிமன்றத்தில் மனுத்தாக்கல் செய்யப்பட்டிருந்தது.
அந்த மனுத் தொடர்பாக தமிழக அரசிடம் நீதிமன்றம் விளக்கம் கோரியிருந்தது. அதுகுறித்து விளக்கம் அளித்த தமிழக அரசு போக்குவரத்துக்கு இடையூறுஏற்படும்பட்சத்தில் சிலையை அகற்றுவதற்கு சம்மதம் தெரிவித்திருந்தது.
இதுகுறித்துக் கருத்துத் தெரிவிக்கும்போதே கருணாநிதி இவ்வாறு தெரிவித்துள்ளார்.
நடிகர் சிவாஜியின் சிலையை தமிழக அரசு அகற்றுமானால் அதற்குரிய பயனை அது அனுபவிக்கும் என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ற)

# பஹாமஸில் கவிழ்ந்தது படகு

## புகலிடக் கோரிக்கையாளர்கள் 30 பேர் சாவு; பலரைக் காணவில்லை

நியூயோர்க், நவ.28
ஹெய்டியில் இருந்து புறப்பட்ட புகலிடக் கோரிக்கையாளர்கள் படகு ஒன்று பஹாமஸ் அருகே கவிழ்ந்ததில் 30 பேர் உயிரிழந்துள்ளனர் என்று தகவல்கள் வெளியாகியுள்ளன.
"குறித்த படகில் 150 பேர் வரையான புகலிடக் கோரிக்கையாளர்கள் பயணித்துள்ளனர். அவர்கள் பாதுகாப்பு வசதிகள் எதுவும் இல்லாத நிலையில் பயணத்தை மேற்கொண்டிருந்தனர். குறிப்பிட்ட அளவு நீர் மற்றும் உணவு ஆகியவற்றை மாத்திரமே கொண்டு கடந்த ஒன்பது நாள்கள் கடல் பயணத்தில் ஈடுபட்டுள்ளனர்" என்று மீட்புக் குழுவினர் கூறுகின்றனர். அதிகமான சுமை மற்றும் கடினமான வானிலை காரணமாகப் படகு கவிழ்ந்துள்ளது.



"விபத்துக்குள்ளான படகை மீட்புக் குழுவினர் அடைந்த போது அதிலிருந்த பலர் நீர்ப் போக்கால் (டிஹைட்ரேஷன்) பாதிக்கப்பட்டிருந்தனர். 30 பேர் உயிரிழந்ததை உறுதிப்படுத்த முடிந்துள்ளது. எனினும் இந்த எண்ணிக்கை அதிகரிக்கக் கூடும் என்று நினைக்கின்றேன். இயன்றவரை மீட்புக் குழுவினர் காணமற் போனவர்களை மீட்க முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றனர்" என்று பஹாமாஸ் பாதுகாப்புப் படைச் செயலாளரான ஓரிஜின் டெலிவியாக்ஸ் தெரிவித்துள்ளார். (ற)

நெருக்கடிகளில் தப்பித்து சட்டவிரோதமாக மேற்கு நாடுகளில் வாழ்க்கை தேடி துணிச்சலான கடல் பயணத்தை மேற்கொள்ளும் பெரும்பான்மையான மக்களின் வாழ்வு அந்தக் கடல்பயணத்திலேயே முடிந்துவிடுகின்ற சோகம் தொடர்ந்துகொண்டே இருக்கின்றது.

## சீனாவுக்கு மண்ணைத் தூவி அமெ. விமானங்கள் சாகசம்

நியூயோர்க், நவ.28
கிழக்கு சீனாவின் கடல் பகுதியில் எந்த நாட்டின் விமானங்களும் பறக்க கூடாது. அவ்வாறு பறக்கக் நேரிட்டால் தம்மிடம் முன் அனுமதி பெற வேண்டும் என்று சீனா எச்சரித்திருந்த நிலையில், அந்தப் பகுதியில் தனது போர் விமானங்களைப் பறப்பில் ஈடுபடுத்தியுள்ளது அமெரிக்கா.
சீனாவில் திடீர் அறிவிப்பு தொடர்பாக அமெரிக்கா மற்றும் ஜப்பான் ஆகிய நாடுகள் கடும் அதிருப்தி வெளியிட்டிருந்தன. இந்தநிலையில் சீனாவால் தடை செய்யப்பட்ட வான் எல்லை வழியாக 2 போர் விமானங்களை அமெரிக்க பறப்பில் ஈடுபடுத்தியுள்ளது.
சீனாவுக்கு எவ்வித முன்னறிவிப்பும் வழங்காது பி-52 எனப்படும் 2 குண்டு வீச்சுச் போர் விமானங்கள் சீன ரேடர்களின் கண்களில் மண்ணை தூவிவிட்டு வெற்றிகரமாகப் பறந்து பத்திரமாகத் தளம் திரும்பியுள்ளன.
இது தொடர்பாக அமெரிக்க இராணுவத் தலைமையகமான பென்ரகன் செய்தி தொடர்பாளர் கருத்து வெளியிடுகையில்,
"குவாமில் இருந்து போர் விமானம் ஒன்று புறப்படும் அதே வேளையில் இன்னொரு போர் விமானம் குவாமை வந்தடையும் வண்ணம் ஒத்திகை பார்க்க நாங்கள் நீண்ட நாள்களுக்கு முன்னரே திட்டமிட்டிருந்தோம். நேற்றுமுன்தினமிரவு அந்த ஒத்திகை வெற்றிகரமாக நடத்தப்பட்டது" என்று தெரிவித்துள்ளார்.
இச்சம்பவம் தொடர்பாக சீன அரசு எதுவிதக் கருத்தையும் இதுவரை வெளியிடவில்லை. (ற)

## பாகிஸ்தான் இராணுவத்துக்கு புதிய தளபதி

இஸ்லாமாபாத், நவ.28
பாகிஸ்தான் இராணுவத்தின் புதிய தளபதியாக ஜெனரல் ரகீல் ஷெரீப் நியமிக்கப்பட்டுள்ளார். அதற்கான உத்தரவை அந்நாட்டுப் பிரதமர் நவாஸ் ஷெரீப் வெளியிட்டுள்ளார்.
அதையடுத்து ஜெனரல் ரகீல் ஷெரீப் இராணுவத் தளபதியாகவும், இவருடன் மற்றொரு இராணுவ அதிகாரியான ஜெனரல் ரசூத் மகமூத் இணை இராணுவத் தளபதியாகவும் எதிர்வரும் 29 ஆம் திகதி பதவியேற்கவுள்ளனர். (ற)

# ஒப்பந்தம் கைச்சாத்திடாவிடில் அமெ. படைகள் நாடு திரும்பும்

### *ஆப்கனை எச்சரிக்கிறது அமெரிக்கா*

நியூயோர்க், நவ.28
"ஆப்கன் பாதுகாப்புத் தொடர்பாக இருநாடுகளுக்கு இடையே எட்டப்பட்ட ஒப்பந்தத்தில் ஆப்கன் அரசு கையெழுத்திட மறுத்தால் அடுத்த ஆண்டு இறுதிக்குள் அமெரிக்கப் படைகள் அங்கிருந்து திரும்ப அழைத்துக்கொள்ளப்படும். ஒப்பந்தம் கையெழுத்தாவதற்காக 2014 ஆம் ஆண்டு அங்கு நடைபெறவுள்ள தேர்தல் வரையிலும் காத்திருக்க முடியாது" என்று எச்சரித்துள்ளது அமெரிக்கா.
ஆப்கன் பயணம் செய்துள்ள அமெரிக்க பாதுகாப்பு ஆலோசகர் சூசன் ரைஸ், அந்நாட்டு ஜனாதிபதி ஹமீத் ஹர்ஸாயிடம் இதுகுறித்த எச்சரிக்கையை விடுத்துள்ளார் என்று தெரிய வருகின்றது.
இருதரப்பு பாதுகாப்பு ஒப்பந்தத்தில் கையெழுத்திட அமெரிக்கா தயாராக உள்ளது என்றும், அதில் ஆப்கனும் உடன் கையெழுத்திட வேண்டும் என்றும் ஹமீத் ஹர்சாயிடம்சூசன்வலியுறுதியுள்ளார். ஆனால் புதியநிபந்தனைகளை விதித்துள்ள ஜனாதிபதி கர்சாய், குறித்த ஒப்பந்தத்தில் கையெழுத்திடுவதற்குரிய சூழ்நிலை ஆப்கனில் இல்லை என்று தெரிவித்துள்ளார்என்றும்தெரியவருகின்றது. 2014ஆம் ஆண்டு ஆப்கனில் தேர்தல்நடைபெற உள்ள நிலையில் அமெரிக்க மற்றும் நேட்டோ படைகளுக்கு சட்ட ரீதியாக பாதுகாப்பு வழங்குதில் உள்ள பிரச்சினையே ஹமீத் ஹர்சாயின் பின்னடிப்புக்குக் காரணமாக



இருக்கலாம் என்று நம்பப்படுகின்றது. அதேவேளை, ஒப்பந்தம் கைச்சாத்திடப்படாவிடில் ஆப்கனுக்கு உதவிகள் வழங்குவது குறித்து நேட்டோ மற்றும் பிற நாடுகள் அளித்த உறுதிமொழிகள் பாதிக்கப்படும் என்று அமெரிக்கா எச்சரித்துள்ளது. (ற)

## நாணய நிதியத்தின் தலைவர் ஆசிய நாடுகளுக்கு பயணம்

நியூயோர்க், நவ.28
வொஷிங்டனைத் தலைமையிடமாகக் கொண்டு செயற்படும் உலக நிறுவனமான சர்வதேச நாணய நிதியத்தின் நிர்வாக இயக்குநர் கிரிஸ்டின் லகார்ட், அடுத்த மாத ஆரம்பத்தில் ஆசியாவின் 3 நாடுகளுக்குப் பயணம் மேற்கொள்ள உள்ளார்.




இதுகுறித்து அந்நிறுவனம் வெளியிட்டுள்ள அறிக்கையில்
"கிரிஸ்டின் லகார் அடுத்தமாதம் 2ஆம் திகதி முதல் 7ஆம் திகதி வரை ஆசிய நாடுகளில் குறிப்பாக கம்போடியா, தென்கொரியா, மற்றும்மியன்மார்நாடுகளுக்கு சுற்றுபயணம் மேற்கொள்ள உள்ளார். கம்போடியா நாட்டில் டிசெம்பர் மாதம் 2 மற்றும் 3ஆம் திகதிகளிலும், தென் கொரியாவில் 4 மற்றும் 5ஆம் திகதிகளிலும், மியான்மரில் 6 மற்றும் 7ஆம் திகதிகளிலும் சுற்றுப்பயணம் மேற்கொள்ளவுள்ளார்" என்று தெரிவிக்கப் பட்டுள்ளது.
அவரது சுற்றுப் பயணத்துக்கான காரணம் எதுவும் அந்த நிறுவனத்தால் அறிவிக்கப்படவில்லை.
எனினும் அவர் மாநில தலைவர்கள், மூத்த அதிகாரிகளை சந்தித்து உலக பொருளாதார நிலை குறித்து ஆராயவுள்ளார் என்று தகவல்கள் வெளியாகியுள்ளன. (ற)

## தீவிரவாதிகள் தாக்குதல்: நைஜிரியாவில் 37 பேர் சாவு

நைஜர், நவ.28
நைஜீரியாவின் வடக்குப் பகுதியில் பிளாட்டியூ மாகாணத்தில் உள்ள 4 கிராமங்கள் மீது தீவிரவாதிகள் நடத்திய தாக்குதலில் 37 பேர் உயிரிந்துள்ளனர்.
தற்போது அந்தப் பகுதிகள் இராணுவக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்டுள்ளன என்று அங்கிருந்து கிடைக்கும் தகவல்கள் தெரிவிக்கின்றன. (ற)

## நிலவுக்கு விண்கலம் அனுப்புகிறது சீனா

பீஜிங், நவ.28
அடுத்தமாதம் சீனா நிலவுக்கு விண்கலம் ஒன்றை அனுப்பவுள்ளது.
2007ஆம் ஆண்டு சந்திரனின் நீள் வட்ட சுற்றுப் பாதையில் 'சேஞ்' என்ற விண்கலத்தை நிலை நிறுத்தியது சீனா.
தற்போது 'யுது' என்னும் மற்றொரு விண்கலத்தையும் சந்திரனுக்கு அனுப்பவுள்ளது.
'யுது' என்பதற்கு சீன மொழியில் 'பச்சை மாணிக்ககல் முயல்' என அர்த்தமாகும். இந்த விண்கலம் மேற்கூரை இல்லாத சிறிய அளவிலானது. இது சீன விண்வெளி ஆய்வில் ஒரு 'மைல்கல்' ஆகும். (ற)



சீனாவின் முதல் விமானம் தாங்கிக் கப்பல் முதல் முறையாக நேற்றுமுன்தினம் தனது பயணத்தை ஆரம்பித்தது. இது சீன கடல் எல்லையை சுற்றியுள்ள நாடுகளுக்குப் பெரும் அச்சுறுத்தலை ஏற்படுத்தும் என எதிர்பார்க்கப்படுகிறது. உலக அரங்கில் சீனா தன் படை பலத்தை நிரூபிக்கும் வகையில், முதல் விமானம் தாங்கிக் கப்பலை கடந்த ஆண்டு தன் கடற்படையில் இணைத்துக் கொண்டது. உக்ரைன் நாட்டில் தயாரிக்கப்பட்ட இந்த விமானம் தாங்கிக் போர்க் கப்பல் கடந்த ஆண்டு சீனக் கடற்படையிடம் ஒப்படைக்கப்பட்டது. இது முதல் முறையாக நேற்றுமுன்தினம் சீனாவின் தெற்கு கடல் பகுதியில் சோதனைக்காக களம் இறக்கப்பட்டது. "இதுஎந்த நாட்டையும் மிரட்டுவதற்கான முயற்சி அல்ல. இது, சீனாவின் சாதாரண கடற்படைச் சோதனை நடவடிக்கையே" என்று தெரிவித்துள்ளது சீனா. (ற)

## சீனாவின் உதவியுடன் பாகிஸ்தானில் அணுமின்

கராச்சி, நவ.28
பாகிஸ்தானின் மிகப் பெரிய வர்த்தக நகரமான கராச்சியில் புதிதாக அணுமின் நிலையம் அமைக்கப்படவுள்ளது.
சீன உதவியுடன் நிறுவப்படவிருக்கும் இந்த அணுமின் நிலையத்துக்கு பிரதமர் நவாஸ் ஷெரிப் அடிக்கல் நட்டுயுள்ளார்.
இதுகுறித்து கருத்துத் தெரிவித்துள்ள பிரதமர் நவாஷ் ஷெரிப்,
"பாகிஸ்தானின் மிகப் பெரிய அணுமின்நிலையமாக அமையவிருக்கும் இந்த மின் உற்பத்தி நிலையம் நாட்டில் நிலவும் மின்பற்றாக்குறையை முடிவுக்குக் கொண்டுவர உதவும்.
மின் உற்பத்தி உள்ளிட்ட பல்வேறு துறைகளிலும் சீனா நமக்கு அளித்துவரும் ஆதரவு பெருமைக்குரியது. அந்த வகையில் இந்த அணு மின் நிலையம் இரு நாட்டு உறவையும் புதிய உச்சத்துக்கு இட்டுச் சென்றுள்ளது." என்று தெரிவித்துள்ளார். (ற)

### தவறிவிட்டது

மறவன்புலோ, சாவகச்சேரியைச் சேர்ந்த சிதம்பரப்பிள்ளை சிவநிர்ஷன் ஆகிய எனது கைப்பை 22.11.2013 அன்று மாலை சாவகச்சேரி சந்தைப்பகுதியில் தவறவிடப் பட்டது. அதனுள் கட்டார் (Qatar) நாட்டு அடையாள அட்டை (இல-28614405375) ATM காட், சிறிதளவு பணம் என்பன அடங்கலாக தவறிவிட்டது. கண்டெடுத் தவர்கள் தயவுசெய்து 0771387285 எனும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்புகொள்ளவும். (40622) (12.3.6)

### தவறிவிட்டது

இராசரத்தினம் ராஜரூபன் என்பவருடைய தே.அ.அ (852011203V), பணம் மீளப் பெறும் ATM அட்டை, வாகன சாரதி அனுமதிப் பத்திரம் என்பன கடந்த 24.11.2013 ஞாயிறு புங்கன்குளம் -பாசையூர் சந்திக்கு இடையில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் தொடர்பு கொள்ளவும். (தகுந்த சன்மானம் வழங்கப்படும்)

தொடர்பு: 077 237 8062

நியூ லக்கி ஹாட்வெயார் (40601) (7.6.3)

### தவறிவிட்டது

குணரத்தினம் லலிதாதேவி என்பவருடைய தே.அ. அ இல. (847013818V), நீதிமன்ற அடையாள அட்டை, சாரதி அனுமதிப்பத்திரம் என்பன யாழ் பேருந்து நிலைய வளாகத்திற்குள் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் கீழ்க்கண்ட இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும். (40530)(7.6.3)

தொடர்பு : 077 945 0934

### பணியாளர் தேவை

கணக்குப் பதிவாளர்
(Accounts Clerk) உடன் தேவை.
தொடர்பு :
மூர்த்தி கலர் லாப், யாழ்ப்பாணம். (சி/13844)
021 222 1358 (12.6.3)


# அனைத்துலக விசாரணை மீது இலங்கைக்கு நம்பிக்கையில்லை

## *அமைச்சர் மஹிந்த சமரசிங்க திட்டவட்டம்*

கொழும்பு,நவ.28

இலங்கைக்கு எதிராக சர்வதேச விசாரணையை வலியுறுத்துவதற்கு பிரிட்டன் பிரதமருக்கு எவ்வித தார்மீக உரிமையும் கிடையாது என்று இலங்கை அரசு நேற்றுமுன்தினம் நாடாளுமன்றில் திட்டவட்டமாக அறிவித்தது.

சர்வதேச விசாரணையின் சுயாதீனத்தன்மை தொடர்பில் தனக்கு நம்பிக்கை இல்லை என்றும், பிரிட்டனின் செயற்பாடுகள் குறித்தே அனைத்துலக விசாரணையை நடத்த வேண்டும் என்றும் அது தெரிவித்தது.

நாடாளுமன்றில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற வரவு-செலவுத் திட்டத்தின் இரண்டாம் வாசிப்புமீதான விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்று கையிலேயே மனித உரிமை விவகாரங்களுக்கான ஜனாதிபதியின் விசேட தூதுவரும், அமைச்சருமான மஹிந்த சமரசிங்க அரசின் சார்பில் இந்தக் கருத்தை வெளியிட்டார்.

இது தொடர்பாக அவர் மேலும் கூறியதாவது:-

"இன்று நாட்டின் அபிவிருத்தியை எடுத்துக் கொண்டால், வடக்கு பிரதேசத்தில் மாத்திரம் அபிவிருத்தியின் வேகம் 25 சதவீதமாக பதிவாகியுள்ளது.

போர் முடிவடையும் நிலையில், 3 லட்சம் மக்கள் இடம்பெயர்ந்தனர். அவர்களைப் பாதுகாத்து, மீள் குடியமர்த்துவதற்கு துரித நடவடிக்கை எடுக்கப்பட்டது. தற்போது, மீள்குடியேற்றப் பணிகள் 93 வீதம் நிறைவடைந்து விட்டன. சரணடைந்த முன்னாள் போராளிகளுக்கான புனர்வாழ்வுப் பயிற்சித் திட்டங்களும் நிறைவடையும் கட்டத்திலுள்ளது. அதாவது, 94 சதவீதம் நிறைவடைந்து விட்டது.

அடுத்ததாக பொது நலவாய மாநாட்டில் பங்கேற்க வந்திருந்த பிரிட்டன் பிரதமர் டேவிட் கமரூன் விடுத்த அறிவிப்பு தொடர்பில் விசேடமாக குறிப்பிட வேண்டியுள்ளது.

பிரிட்டன் பிரதமர் கமரூன் இலங்கைக்கு வருவதற்கு முன்னர் எட்டுப் புலம்பெயர் தமிழ் அடிப்படைவாத அமைப்புகளுடன் கலந்துரையாடல் நடத்தியுள்ளார். இலங்கைக்குச் சென்று சர்வதேச விசாரணையை வலியுறுத்துவார் என்று இதன்போது அவர் உறுதியளித்துள்ளார். இதன்படியே இங்கு வந்து சர்வதேச விசாரணையைக் கோரி, அறிவிப்பை அவர் விடுத்துள்ளார்.

இலங்கை மீது விரல் நீட்டுவதற்கு அவருக்கு எவ்வித தார்மீக உரிமையும் கிடையாது.

ஈராக், ஆப்கானிஸ்தான் போன்ற நாடுகள் தொடர்பில் பிரிட்டன் எவ்வாறு செயற்பட்டது? எனவே, பிரிட்டனில்தான் முதலில் சர்வதேச விசாரணை நடத்தப்பட வேண்டும். சர்வதேச விசாரணையின் சுயாதீனத் தன்மை தொடர்பில் எமக்கு நம்பிக்கையில்லை. ஏனெனில், அதன் பின்னணியில் அரசியல் நிகழ்ச்சி நிரலொன்று இருக்கின்றது என்பது எமக்குத் தெரியும். அத்துடன், இறுதியில் அந்த விசாரணையை யார் இயக்குவது என்பதும் எமக்குத் தெரியும். குறிப்பாக, தருஸ்மன் அறிக்கையைக் கூட நியமிக்கப்பட்ட மூவர் எழுதவில்லை. வேறுயாரோதான் அந்த அறிக்கையை எழுதினார்கள். - என்றார். (ச-சி)


பிரதேசத்தில் முதல் தர நிறுவனத்தில்

## Mathuram Institute

Dutch Road, Irupalai, Kopay.

எம்மிடம் கற்கும் மாணவர்களே பாடசாலைகளில் முதல் நிலை பெற்று சாதனை படைக்கின்றனர்!



O/L 2012 இதற்கான சான்றுகள்

செல்வி கு.சுயாணி 9A
யாழ் வேம்படி மகளிர் கல்லூரி
செல்வி ந.வேணுஜா 9A
யாழ் இந்து மகளிர் கல்லூரி
செல்வன் பா.விசாகன் 7A,B,S
செங்குந்த இந்துக்கல்லூரியில் முதல் நிலை
செல்வன் ர.சுயந்தன் 5A, 2B, C, S
கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரியில் முதல் நிலை
செல்வன் த.நிக்ஷன் 5A, 2B, C, S
நல்லூர் மங்கையர்க்கரசி வித்தியாலயத்தில் முதல் நிலை
செல்வன் ப.கௌதமன் 3A, B, 3C, 2S
கோப்பாய் மகா வித்தியாலயத்தில் முதல்நிலை

தரம் 1 முதல் O/L வரை புதிய வகுப்புகள் ஆரம்பம் 01.12.2013 காலை 9.00மணி

இவர்கள் தவிர பல மாணவர்கள் உயர் பெறுபேறுகளை பெற்றுள்ளதோடு கற்ற அனைத்து மாணவர்களும் சித்தியடைந்துள்ளனர்.

புலமை பரிசில் பரீட்சை 2012, 2013 இல் 12 மாணவர்கள் சித்தி!
கற்ற மாணவர்கள் அனைவருக்கும் 100 புள்ளிகளுக்கு மேல்!
சீரிய தலைமையின் கீழ் சிறந்த ஆசிரியர்களின் வழிகாட்டலில்
இரண்டாவது தசாப்தத்தில் சர்வதேச தரத்தில் அனைத்து
வசதிகளையும் கொண்ட உயர் நிறுவனத்தில்
உங்கள் பிள்ளைகளையும்
இணைப்பதற்கு, அரிய வாய்ப்பு !

புதிய கல்வி ஆண்டு 2014

அனுமதிகளை வழங்குகின்றோம்.

(சி/14779) (7.6.3)


## வலிகாமம் தெற்கு பிரதேசசபை சுன்னாகம்
## 2014 ஆம் ஆண்டுக்கான மீள் கேள்வி அறிவித்தல்

வலிகாமம் தெற்குப் பிரதேச சபையின் எல்லைக்குட்பட்ட மரக்கறிச் சந்தைகள், மீன் சந்தைகள், கருவாட்டுக் கடைகள், மீன் வெட்டுமிடம் என்பவற்றை 01.01.2014 தொடக்கம் 31.12.2014 ஆம் திகதி வரை குத்தகைக்கு வழங்குவதற்கான மீள் கேள்விகள் கோரப்படுகின்றன.

| தொ. இல. | விவரம் | மீளளிக்கப்படாத கேள்விப் பத்திரப் பணம் | கேள்வி வைப்பு | ஏற்றுக்கொள்ளக் கூடிய ஆகக் குறைந்த கேள்வித் தொகை (வற் வரி தவிர) | மாத வாடகை (வற் வரி தவிர) |
|---|---|---|---|---|---|
| | சுன்னாகம் உப அலுவலகம் | | | | |
| 1 | சுன்னாகம் மத்திய மரக்கறிச் சந்தை (வாகனத்தரிப்பிடம் உட்பட) | 2000.00 | 30000.00 | 7301001.00 | - |
| 2 | சுன்னாகம் ஆட்டிறைச்சிக்கடை | 1000.00 | 10000.00 | 245000.00 | 250.00 |
| 3 | கருவாட்டுக் கடை இல.03 | 750.00 | 7500.00 | 39700.00 | 250.00 |
| 4 | சுன்னாகம் மாட்டிறைச்சிக் கடை இல.05 | 1000.00 | 10000.00 | 1221000.00 | 250.00 |
| | உடுவில் உப அலுவலகம் | | | | |
| 5 | இணுவில் சந்தை ஆட்டிறைச்சிக்கடை | 500.00 | 5000.00 | 74500.00 | 250 |
| 6 | மருதனார்மடச் சந்தை பொது மலசலகூடம் | 750.00 | 7500.00 | 50000.00 | - |

கேள்விப் பத்திரம் வழங்கும் காலம் - 09.12.2013 பிற்பகல் 2 மணிவரை வழங்கப்படும்
கேள்விப் பத்திரம் ஏற்றுக்கொள்ளும் கடைசித் திகதி -10.12.2013 நண்பகல் 12 மணிவரை
கேள்விப் பத்திரம் திறக்கப்படும் திகதி - 10.12.2013 பிற்பகல் 2 மணிக்கு
கேள்வி சம்பந்தமான மேலதிகமான விவரங்களை -2013.10.23 ஆம் திகதிய உதயன், தினகுரல், வலம்புரி, பத்திரிகைகளில் பார்வையிடலாம். எமது அலுவலகத்திலும் அலுவலக நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

தி.பிரகாஷ்
தவிசாளர்,
வலி.தெற்கு, பிரதேசசபை, சுன்னாகம்.

(சி.13843) (45.6.3)


### பதவி வெற்றிடம்

யாழ்ப்பாணத்தில் உள்ள ஆச்சி பூட்சென்ரரில் பின்வரும் பதவிகளுக்கான ஆளணியினர் தேவை.

1. காசாளர் (பெண்கள்):
O/L பூர்த்தி செய்திருப்பதுடன் கணினி அறிவும் விரும்பத்தக்கது.
2. Sales Girls : தரம் 9 ஐப் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

சம்பளம் பேசித்தீர்மானிக்கப்படும்.
(யாழ் நகரசபை எல்லைக்குள்வசிப்பவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.)
தகுதி உடையவர்கள் சுயவிபரக் கோவையுடன் நேரில் சமுகம் தரவும்.

ஆச்சி பூட் சென்ரர்
117, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.
Tel: 021 222 2092, 077 231 3186

(சி/13847)(10.6)

### வாழ்த்துகின்றோம்

துரைராஜா கந்தசாமி J.P (W.I)



சாவகச்சேரி நுணாவில் மத்தியைச் சேர்ந்தவரும்
ஈழ ஏதிலிகள் புனர்வாழ்வுக் கழகத்தின்
யாழ் மாவட்ட இணைப்பாளருமாகிய
துரைராஜா கந்தசாமி J.P (W.I)
அவர்கள் நேற்று
27.11.2013 நீதிவான்
உயர்திரு செ.லெனின்குமார்
முன்னிலையில் அகில இலங்கை சமாதான நீதிவானாகச்
சத்தியப்பிரமாணம் செய்து கொண்டார்.
அவரின் சமூகப்பணி சிறக்க வாழ்த்துகின்றோம்.

நுணாவில் மக்கள்.

### தேவை

எமது நிறுவனத்திற்கு விற்பனைப் பிரதிநிதிகள்
உடன் தேவை

விற்பனைக்கு வழங்கப்படும் பொருள்களில் 75 வீதமான பொருள்களை விற்பனை செய்வோருக்கு அடிப்படை வேதனமாக ரூபா 15,000/= வழங்கப்படும். மேலதிக விற்பனை செய்யும் பொருள்களுக்கு கவர்ச்சிகரமான கமிஷன் வழங்கப்படும். உணவு, தங்குமிடம் இலவசம். நேரில் வரவும்.

தொடர்புகளுக்கு: 021 227 0586
சுஜித் என்ரபிறைசஸ்
பழனி ஆண்டவர் ஆலயத்திற்கு முன்பாக
... வீதி, சாவகச்சேரி.
(சி/2792) (7.6.3)

### இறைச்சிக் கோழிகள் விற்பனைக்கு

1) புறொயிலர்
2) கல்பேட்
3) பேரன்ஸ் போன்ற இன இறைச்சிக் கோழிகள் மொத்தமாக விற்பனைக்குண்டு.

உரிய இடங்களுக்குக் கொண்டு வந்து தரப்படும்.
தொடர்பு:
077 777 3606, 077 786 3687
(40629)(12.3.6)

இதோ!
சித்த ஆயுர்வேத முறைப்படி தயாரிக்கப்பட்ட இருமல் நிவாரணி!
தீராத இருமல்,சளி,இளைப்பு மற்றும் நுரையீரல்,சுவாச நாளங்களில் உண்டாகும் சளி நோய்கள், தொண்டையில் ஏற்படும் நமைச்சல் ஆகிய நோய்களை விரைவில் குணமாக்கும் அதியற்புத தேசிய ஔஷதம்

### சித்தாரா அதிமதுரம் ஆடாதோடை இருமல் பாணி

யாழ்.குடாநாட்டின் அனைத்து பார்மஸிகளிலும்,கடைகளிலும் பெற்றுக்கொள்ளலாம்.

Manufactured By:
SITHARA PRODUCTS
Puttalam Road, Chilaw.
(Reg.No.-6382) AR/PR/No.228

யாழ்.மாவட்ட ஏக விநியோகஸ்தர்:
சிவா நறுமணப் பூங்கா
இல.288, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே.: 021 222 2567

(குறிப்பு: சத்திரச் சந்திக்கு அண்மையில்)
(சி/13577)(7.6.3)

## 1008 இளநீர் கொண்டு மழை வேண்டி அபிஷேகம்



அக்கராயன், நவ.28
கிளிநொச்சி ஸ்கந்தபுரம் கரும்புத் தோட்டம் பிள்ளையார் ஆலயத்தில் மழை வேண்டி 1008 இளநீர் அபிஷேக பூசை வழிபாடு கடந்த திங்கட்கிழமை நடைபெற்றது.
அக்கராயன் குளத்தின் கீழ் நெற்செய்கையில் ஈடுபட்டுள்ள விவசாயிகள் ஒன்றிணைந்து இந்தவழிபாட்டினை நடத்தினர்.
4 ஆயிரத்து 500 ஏக்கருக்கு மேலான நிலப்பரப்பில் நெற்செய்கையில் ஈடுபட்டுள்ள விவசாயிகள் மழையின்மையால் நெற் பயிர்கள் அழிவதைத் தடுக்க இவ்வழிபாட்டில் ஈடுபட்டனர்.
இந்த நிகழ்வில் கிளிநொச்சி மாவட்ட பிரதி நீர்ப்பாசனப் பணிப்பாளர் என்.சுதாகரன், நீர்ப்பாசன பொறியிலாளர் விகிர்தன் ஆகியோர் கலந்து கொண்டனர். (எ-18)

# நாயாற்றில் உப்பளம்: வெளியார் மும்முரம்

### *தடுத்து நிறுத்துமாறு முதலமைச்சருக்கு கடிதம்*

மன்னார், நவ.28
விடத்தல்தீவு கிழக்கு கிராம சேவையாளர் பிரிவுக்குட்பட்ட நாயாற்றுப் பகுதியில் வெளியூர் வாசிகள் சிலர் அனுமதியின்றி உப்பளம் அமைக்கும் முயற்சியில் ஈடுபட்டு வருவதாக விடத்தல்தீவு கிழக்கு கிராம அபிவிருத்திச் சங்கத்தின் தலைவர் பொ.சிவேந்திரன் தெரிவித்தார்.
இது தொடர்பாக விடத்தல் தீவு கிழக்கு கிராம அபிவிருத்திச் சங்கம் வடமாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரனுக்குக் கடிதம் ஒன்றையும் அனுப்பி வைத்துள்ளது.
குறித்த கடிதத்தில்;
விடத்தல் தீவு கிழக்கு கிராம சேவையாளர் பிரிவுக்குட்பட்ட நாயாற்றுப் பகுதியில் உள்ள 50 ஏக்கர் நிலப்பரப்பைக் கொண்ட உப்புத்தரவையில் சில வெளியூர் வாசிகள் கிராம அலுவலரின் அனுமதியின்றி உப்பளம் அமைக்கும் முயற்சியில் ஈடுபட்டு வருகின்றனர்.
இந்த விடயம் எமக்கு மிகவும் கவலையையும், வேதனையையும் அளிக்கின்றது. அத்துடன் மக்களின் விவசாய நிலங்களும் அதில் உள்ளடக்கப்பட்டுள்ளன.
எனவே உடனடியாக குறித்த நடவடிக்கைகள் நிறுத்தப்பட வேண்டும். விடத்தல் தீவு கிழக்கு கிராம அலுவலர் பிரிவுக்குட்பட்ட அனைத்து அரச காணிகளையும் அடையாளம் கண்டு எமக்கு தெரியப்படுத்துவதோடு இங்குள்ள கிராம அலுவலரின் பகுதிக்குள் நடைபெறும் எந்த நடவடிக்கையாக இருப்பினும் கிராம அலுவலரின் அனுமதியைப் பெற்றிருக்க வேண்டும் என்கின்ற நடை முறையை சம்பந்தப்பட்ட வர்களுக்கு அறியப்படுத்துமாறு கேட்டுக்கொள்கின்றோம் என குறிப்பிடப்பட்டுள்ளது.
கடிதத்தின் பிரதிகள் தமிழ்த் தேசியக்கூட்டமைப்பின் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன், வடமாகாண அமைச்சர் பா.டெனீஸ்வரன், காணி விவகாரங்களுக்கான வட மாகாண சபை உறுப்பினர் மருத்துவர் ஜீ.குணசீலன் ஆகியோருக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. (க-12)

## மன்னாரில் ஞாயிறு வரவேற்பு நிகழ்வு

மன்னார், நவ.28
வடமாகாண முதலமைச்சர் மற்றும் அமைச்சர்கள், மன்னார் மாவட்டத்தைச் சேர்ந்த வடமாகாண சபை உறுப்பினர்கள் அனைவரையும் வரவேற்கும் வரவேற்பு நிகழ்வு எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு மன்னார் நகர சபை மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.
மன்னார் மாவட்டத்தில் உள்ள அனைத்து கூட்டுறவுச் சங்கங்களும் இணைந்து நடத்தும் இந்த நிகழ்வு மன்னார் மாவட்ட கூட்டுறவுச் சபையின் தலைவர் எஸ்.ரெட்ணசிங்கம் தலைமையில் இடம்பெறவுள்ளது.
அன்றைய தினம் பிற்பகல் 2.30 மணியளவில் மன்னார் பிரதான பாலத்தில் இருந்து மன்னார் நகர சபை மண்டபம் வரை விருந்தினர்கள் அழைத்துச் செல்லப்பட்டு நிகழ்வுகள் ஆரம்பிக்கபடவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (க-12)

## மீளக் குடியமர்ந்தும் இன்னுமில்லை நிரந்தர வீடுகள்

அக்கராயன், நவ.28
கிளிநொச்சி மாவட்டத்தில் மீளக்குடியமர்ந்து நான்கு ஆண்டுகள் கடந்த நிலையிலும் நிரந்தர வீடுகள் கிடைக்காத குடும்பங்கள் தொடர்பாக கிளிநொச்சியில் இடம்பெற்ற ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.
குறிப்பாக இரண்டு அங்கத்தவர்களைக் கொண்ட குடும்பங்கள் வீடுகள் கிடைக்காத நிலையில் வாழ்வதாகத் தெரிவிக்கப்பட்டது. ஜெயபுரம் கிராமத்தில் மட்டும் இரண்டு அங்கத்தவர்களைக் கொண்ட 120 குடும்பங்கள் உள்ளன. நிரந்தர வீடுகள் கிடைக்காத இத்தகைய குடும்பங்கள் தற்காலிக வீடுகளில் வாழ்வதன் காரணமாக மழையின் போது பெரும் இடர்களை எதிர்கொள்வதாகவும், குறிப்பாக சிறுவர்களின் கல்வி இதனால் மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது. (க-18)



கூமாங்குளம் இளைஞர் கழகத்தின் ஏற்பாட்டில், சுரேந்திரன் நற்பணிமன்றத்தின் அனுசரணையுடன் கூமாங்குளம் சித்தி விநாயகர் வித்தியாலயம், கந்தபுரம் வாணி வித்தியாலயம் ஆகிய பாடசாலைகளிலிருந்து க.பொ.த.சாதாரணதரப் பரீட்சையில் தோற்ற இருக்கும் மாணவர்களுக்கான இலவச கருத்தரங்கு இடம்பெற்றதுடன், கற்றல் உபகரணங்களும் வழங்கப்பட்டன. இந்த நிகழ்வில் தேசிய இளைஞர் சேவை மன்ற அதிகாரிகள் சுரேந்திரன் நற்பணிமன்ற முக்கியஸ்தர்கள் உட்படப் பலரும் கலந்து கொண்டனர். (க-435)

## நாகரிகமற்று நடக்கும் மினிபஸ் நடத்துநர்கள்

### *பயணிகள் பெரும் விசனம்*

கிளிநொச்சி, நவ.28
கிளிநொச்சி ஏ-9 வீதியில் கடமையாற்றும் சில தனியார் பஸ் நடத்துநர்கள் பயணிகளிடம் தரக்குறைவாக நடந்து கொள்வதாக பயணிகள் முறைப்பாடு தெரிவித்துள்ளனர்.
ஏ-9 வீதியால் பயணிக்கும் தனியார் பஸ்கள் சிலவற்றின் பஸ் நடத்துநர்கள் பயணிகளை கீழ்த்தரமான வார்த்தை களைப் பயன்படுத்தி ஏசுவதாகவும் பஸ்களில் பயணிகள் ஏறும் போதும் இறங்கும் போதும் நாகரிகமற்ற முறையில் நடந்து கொள்வதாகவும் பாதிக்கப்படும் பயணிகள் பலராலும் கூறிக் கவலையும் விசனமும் தெரிவிக்கப்படுகின்றது.
இவர்கள் பயணிகளைக் கண்டபடி ஏசித் திட்டுவதாகவும் அநாகரிகமான வார்த்தைகளைப் பயன்படுத்துவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. சில நடத்துநர்கள் பெண் பயணிகளின் உடலில் கண்டபடி கை வைத்து பஸ்ஸினுள் தள்ளிவிடுவதாகவும் பயணிகளால் விசனம் தெரிவிக்கப்படுகின்றது.
கடந்த 10 ஆம் திகதி முல்லைத்தீவு வீதியூடாக பரந்தன் சந்தியை அடைந்து ஏ-9 வீதியூடாக காலை 8.30 மணியளவில் பயணித்த தனியார் பஸ்ஸின் நடத்துநர் ஒருவர் பயணிகளைக் கண்டபடி ஏசித் திட்டியதுடன் அநாகரிகமாக நடந்து கொண்டதாகவும் அந்த பஸ்ஸில் பயணித்தவர்கள் தெரிவித்தனர்.
மேலும் இவர் சினமூட்டும் வகையில் கீழ்த்தரமாகப் பயணிகளுடன் நடந்து கொண்டதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. இதனால் சில பயணிகள் தனியார் பஸ்களில் ஏறுவதற்குத் தயங்கும் நிலை காணப்படுவதாக வும் தெரிய வருகின்றது.
சில நடத்துநர்கள் தமது தொலைபேசி இலக்கங்களை மீதிப் பணத்துடன் சேர்த்து பஸ் ரிக்கெற்றுக்களில் எழுதி இளம் பெண்களிடம் கொடுப்பதாகவும் நேரில் அவதானித்த வர்கள் தெரிவிக்கின்றனர்.
இத்தகைய நடத்துநர்கள் தொடர்பாக உரிய தனியார் பஸ் சங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டுமெனவும் பயணிகள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (க-426)

# வீட்டுக்கு வீடு பஸ் தரிப்பிடமா? மன்னாரில் பயணிகள் கேள்வி

தரிப்பிடங்கள் தவிர்ந்த ஏனைய இடங்களில் மன்னாரிலிருந்து கொழும்பு செல்லும் அரச பஸ் அடிக்கடி நிறுத்தப்படுவதால் தாம் சிரமங்களை எதிர் கொள்வதாக பயணிகள் விசனம் தெரிவிக்கின்றனர்.
மன்னாரிலிருந்து கொழும்பு செல்லும் இரவுநேர இ.போ.ச. பஸ் தலைமன்னாரில் இருந்து புறப்பட்டு 8 மணி யளவில் பேசாலை வந்து பின்னர் கரிசல், புதுக்குடியிருப்பு, தாராபுரம் தாழ்வுபாடு ஊடாக மன்னார் நகரை வந்தடைந்து 9.30 மணிக்கு கொழும்பை நோக்கிப் பயணிக்கின்றது.
ஆனால் இந்த பஸ் தரித்து நிற்கும் இடங்கள் தொடர்பாக பயணிகள் சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர். குறிப்பாக கரிசல், புதுக்குடியிருப்பு, தாராபுரம் ஆகிய இடங்களில் வீட்டுக்கு வீடு தரிப்பிடங்கள் உள்ளது போன்று பஸ்ஸை நிறுத்தி சாரதியும் நடத்துநரும் பயணிகளை ஏற்றுகின்றனர்.
இதனால் தலைமன்னாரில் பஸ்ஸில் ஏறும் ஒரு பயணி 50 க்கும் மேற்பட்ட தரிப்பிடங்களை மன்னார் செல்லும் வரை நிற்க வேண்டியுள்ளதுடன் பல சிரமங்களையும் எதிர்கொள்கின்றார். இந்த பஸ் பல இடங்களிலும் தரித்து நின்று மீண்டும் புறப்படும் போது ஏற்படும் புகை மற்றும் டீசல் வாசனையால் பல பயணிகள் வாந்தி எடுக்க நேரிடுவதாகவும் கூறப்படுகின்றது. ஆனால் இந்த பஸ் பேசாலை மற்றும் எருக்கலம்பிட்டி ஆகிய இடங்களுக்குச் செல்வதில்லை. தனிப்பட்ட அரசியல் காரணமாக இது இடம்பெறுவதாகவும் பயணிகள் தெரிவிக்கின்றனர்.
மேலும் குறிப்பிட்ட இடங்களில் மட்டுமே வீடு வீடாக பஸ்ஸை நிறுத்துவது ஏனைய பயணிகளின் உரிமையை மீறும்செயல் எனவும் தெரிவிக்கப்படுகின்றது.
தேவையென்றால் கரிசலில் இருந்து ஒரு பஸ்ஸைவிட்டு குறிப்பிட்ட இந்தப் பயணிகளை ஏற்றிவந்து மன்னாரில் இருந்து கொழும்பு செல்லும் பஸ்ஸில் ஏற்றிச் செல்லக்கூடிய ஒழுங்குகளை மேற்கொள்ள வேண்டும். இதைவிடுத்து தலைமன்னார், பேசாலை ஆகிய இடங்களைச் சேர்ந்த பயணிகளை சிரமங்களுக்கு உள்ளாக்குவது சரியல்லவென பாதிக்கப்படுபவர்கள் தெரிவிக் கின்றனர். (க-ரி)

## முருங்கன் மருத்துவமனையில் இடர் விழிப்புணர்வு நிகழ்வு



மன்னார், நவ.28
மன்னார் முருங்கன் பிரதேச மருத்துவமனையில் இடர் முகாமைத்துவ விழிப்புணர்வு நிகழ்வு இடம்பெற்றது.
மன்னார் மாவட்டத்தில் அண்மைக் காலமாக இடர்கள் ஏற்படுவதால் இந்த இடர் தொடர்பான அறிவுறுத்தல் வழங்கும் நிகழ்வானது முருங்கன் மாவட்ட வைத்திய அதிகாரி மருத்துவர் ஒஸ்மன் சாள்ஸ் தலைமையில் முருங்கன் பிரதேச மருத்துவமனையில் கடந்த செவ்வாய்க்கிழமை இடம்பெற்றது.
இந்த நிகழ்வானது மன்னார் பிராந்திய சுகாதாரப் பணிப்பாளரின் வேண்டுகோளுக்கிணங்க இடம்பெற்றது. மன்னார் அரசசெயலக இடர் தொடர்பான முகாமைத்துவப் பிரிவினரும், மருத்துவர் கே.அரவிந்தனும் இடர் தொடர்பாக முன் எச்சரிக்கை செய்தல், இடர்களால் ஏற்படும் விளைவுகளைக் குறைத்தல் மற்றும் தொற்று நோய் பரவுதலைக் கட்டுப்படுத் தல் தொடர்பான அறிவுரை களை உத்தியோகத்தர்களுக் கும், ஊழியர்களுக்கும் வழங் கினர். (க-12)

# பற்றைகள் வளர்ந்துள்ளதால் மீள் குடியமர்ந்தோருக்குச் சிரமம்

### *விஷ ஜந்துக்களும் பெருக்கம்*

முல்லைத்தீவு, நவ.28
முல்லைத்தீவு மாவட்டத்தில் மக்கள் இதுவரை மீள்குடியமர்த்தப்படாத காணிகளில் பற்றைகள், காடுகள் வளர்ந்து காணப்படுவதால் மீள்குடியமர்ந்த மக்கள் அசௌகரியங்களை எதிர்கொண்டு வருகின்றனர்.
வெளிநாடுகளில் வசிப்பவர்கள், பிறமாவட்டங்களில் குடியமர்ந்தவர்கள் ஆகியோரின் காணிகளும், உரிமை கோரப்படாத காணிகளுமே இவ்வாறு காணப்படுகின்றன.
இந்தக் காணிகள் பராமரிப்பின்றிக் காணப்படுவதால் நுளம்புகள் பெருகிக் காணப்படுகின்றன. அத்துடன் கால்நடைகளின் தங்குமிடமாகவும் மாறியுள்ளன. இதனால் இந்தக் காணிகளுக்கு அருகில் குடியிருப்பவர்கள் பயிர்ச் செய்கையில் ஈடுபட முடியாத நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர்.
மேலும் விஷ ஜந்துக்களின் நடமாட்டமும் காணப்படுவதால் அச்சமான சூழ்நிலைக்குள் வசித்து வருகின்றனர்.
எனவே அதிகாரிகள் இந்தக் காணிகளைத் துப்புரவு செய்வதற்கான நடவடிக்கைகளை எடுக்க வேண்டுமென வேண்டுகோளும் விடுக்கப்பட்டுள்ளது. (க-500)

